விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 194 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 17 செவ்வாய்க்கிழமை (01.07.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

உங்கள் ஆரோக்கியம் எமது நோக்கம்
Royal
றோயல்
சுத்தமான பசு நெய்
ஆய்வுகூடத்தில் தரம்
பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகிறது.
Marketed By:-
(C-3310)
சிவா நறுமணப் பூங்கா ®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கு அருகாமை)
தொ.பே : 021 2222 567

## செம்மணியில் ஒன்றோடு ஒன்று பிணைந்த நிலையில் எலும்புத்தொகுதிகள்

(யாழ்ப்பாணம்)



- நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா கண்காணிப்பில் நேற்றும் அகழ்வு.
- சமூகவலைத்தளங்களில் செயற்கைப் படங்களைப் பரப்பினால் சட்ட நடவடிக்கை.

(02ஆம் பக்கம் பார்க்க)

## செம்மணி புதைகுழிக்கு நீதியை வலியுறுத்தி

### திருகோணமலையில் தீப்பந்தப் போராட்டம்



(திருகோணமலை)

செம்மணி மனிதப் புதை குழியில் அகழப்பட்டு வரு கின்ற மனித எலும்புக்கூடு கள் தொடர்பில் முறையான விசாரணை மேற்கொண்டு

15ஆம் பக்கம் பார்க்க

## எரிபொருட்களின் விலைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

மாதாந்திர எரிபொருள் விலை திருத்தத்திற்கு ஏற்ப (30) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருள் விலைகளை அதிகரிக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

அதன்படி லங்கா ஓட்டோ டீசல் ஒரு லீற்றரின் விலை 15 ரூபாயால் அதிகரிக்கப்பட்ட நிலையில், அதன் புதிய விலை 289

15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணி மனிதப் புதைகுழி

# தேவையான ஒத்துழைப்பை அரசாங்கம் வழங்கும்

### பாராளுமன்றில் அமைச்சர் சந்திரசேகர்

(யாழ்ப்பாணம்)



செம்மணி மனிதப் புதைகுழி ஆய்வுகளை முன்னெடுக்கத் தேவையான அனைத்து ஒத்துழைப்பையும் வழங்குவோம் என கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## 39 கிலோ கஞ்சாவுடன் கிளிநொச்சியில் பெண் கைது

(கிளிநொச்சி)



கிளிநொச்சியில் 39 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தில் பெண் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணி புதைகுழி

### நீதியான விசாரணை உறுதி



### அமைச்சர் பிமல் ரத்நாயக்க

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் நீதியான விசாரணை நடத்துவோம் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## நெடுந்தீவு பிரதேச சபை

# இலங்கைத் தமிழரசுக் கட்சி வசம்

### தவிசாளராக சங்கரப்பிள்ளை சத்தியவரதன் தெரிவு

(யாழ்ப்பாணம்)



நெடுந்தீவு பிரதேச சபையின் தவிசாளராக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சங்கரப்பிள்ளை சத்தியவரதன் தெரிவாகியுள்ளார்.

நெடுந்தீவு பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் பிரதித் தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் நேற்று நெடுந்தீவு பிரதேச சபை சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்

15ஆம் பக்கம் பார்க்க

## அராலியில் மயங்கிவிழுந்த இளம் குடும்பஸ்தர் மரணம்

### உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

அராலியில் மயங்கி விழுந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்ததோடு அவரின் உயிரிழப்புக்கான காரணம் தெரியவராத நிலையில் அவரின் உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

15ஆம் பக்கம் பார்க்க

## பாலஸ்தீன கொலையை நிறுத்து

### கொழும்பில் ஆர்ப்பாட்டம்



15ஆம் பக்கம் பார்க்க

## தனியார் போக்குவரத்து சேவை

### வடக்கில் இன்று பணிப் புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

தனியார் போக்குவரத்து சேவைகள் வடக்கு மாகாணத்தில் இன்று பணிப்புறக்கணிப்

15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் அரசறிவியல் பாட ஆசிரியர்
**திருமதி அமிர்தரஞ்சினி திருநாவுக்கரசு**
அவர்களின் அன்புத் தாயார்

## கந்தையா பேபிகமலா



தோற்றம் 07.01.1950 | மறைவு 30.06.2025

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் உறவுகளுக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/ மகாஜனக் கல்லூரி**

(C-3312)

## செம்மணியில் ...

செம்மணி மனிதப் புதைகுழியில் ஒன்றோடொன்று பிணைந்த நிலையில் எலும்புத் தொகுதிகள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளன.

சமூக வலைத்தளங்களிலும் பொது வெளியிலும் செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான செயற்கைப் படங்களை பரப்புவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனச் சட்டத்தரணி ரனித்தா ஞானராஜா தெரிவித்தார்.

அகழ்வாராய்ச்சி பணிகள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே இதனைத் தெரிவித்தார்.

செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி அகழ்வின் இரண்டாம் கட்டத்தின் ஐந்தாம் நாள் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா கண்காணிப்பில் முன்னெடுக்கப்படும் அகழ்வில் இது வரையான அகழ்வில் 33 மனித எலும்புத் தொகுதிகள் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளன.

அடையாளம் காணப்பட்ட எலும்புத் தொகுதிகள் தொடர்பாக நிபுணர்கள் வேலை செய்ய வேண்டிய தேவைப்பாடு இருப்பதால் இன்று (நேற்று) பகல் பொழுதில் மட்டும் இரண்டு சிறுவர்களின் உடல்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டு ஆய்வுக்காக தனிமைப் படுத்தப்பட்டுள்ளன.

இந்த மட்டத்திலுள்ள எலும்புத் தொகுதிகள் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து குழப்பமான சூழலில் இருப்பதால் சரியான விதத்தில் ஆய்வொன்றைச் செய்து தெளிவான விதத்தில் சரியாக அகழ்ந்து எடுப்பதற்கு நேரம் எடுக்கும் என்பதால் இன்று (நேற்று) புதிதாக எதுவுமே அடையாளப்படுத்தப்படவில்லை.

சமூக வலைத்தளங்களிலும் பொது வெளியிலும் செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பான செயற்கைப் படங்களைப் பரப்புவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். எதிர் வரும் காலத்தில் தொடர்ந்து இவ்வாறான படங்கள் பகிரப் படுமாக இருந்தால்,

குற்றவியல் விசாரணைகளை இடையூறு செய்தார் என்ற அடிப்படையிலும் நிலுவையிலுள்ள வழக்கில் நீதி மன்றை அவமதித்தார் என்ற அடிப்படையிலும் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ம-7,33)

# UNIVERSITY OF JAFFNA
## INVITATION FOR BID

01. **The Chairman, Procurement Committee of University of Jaffna** now invites sealed bids from eligible and qualified bidders for the following works:

| No | Bid ID | Description of Work | Estimated Cost (Rs. In million) without VAT | Contract Period (No of Calendar Days) | Required CIDA Grade | Required Bid Security Amount and period | Non-refundable fee |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | YA/CWP/CW/ C2/2025/02 | Supply, Installation and Testing of Structed Cabling Network for Clinical Department, Faculty of Medicine, University of Jaffna | 29.43 | 90 | EM3 or above (Extra Low Voltage Installations) | Rs. 295,000.00 13.11.2025 | Rs. 7,500.00 |
| 2 | YA/CWP/CW/ C2/2025/03 | Supply, Installation, Testing and Commissioning of Pre - Treatment System (Automatic) at Roof Top of the Eight Storied Clinical Department Building, Faculty of Medicine, University of Jaffna | 4.57 | 90 | C8 or above (Building Construction) | Rs. 46,000.00 13.11.2025 | Rs. 1,600.00 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for the contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the relevant field with the Construction Industry Development Authority (CIDA), as specified in the table above
4. Interested bidders may obtain further information from **Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna** and view the bidding documents at the same address on any working day from **9:00hrs to 16:00hrs.**
   Contact numbers are: Phone: 021 2219201 Fax: 021 221 9201.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the **Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna** from **02nd July 2025** until **17th July 2025** from **9:00 hrs to 16:00 hrs and** upon payment of a non-refundable fee detail given above table to be deposited to the Peoples Bank with the Reference No **"970000060000276"** should be filled in the Account Number column in the Deposit Slip or the payment can be made at the Shroff counter, University of Jaffna.
6. Sealed Bids shall be delivered or sent by registered post to the **Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna or be deposited in the tender box kept in the Capital Works & Planning Branch,** to reach **on or before 10.00 hrs on the 18th July, 2025.** Bids will be opened soon after closing, at **10.00 hrs on the 18th July, 2025** at the same venue in the presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid at least for a period of **91 Days** from the date fixed for receiving of Bids or any extended date.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in the Section 09 in the Bidding document.
   - In favour of ***"Vice Chancellor, University of Jaffna."***
   - For the amount indicated in the above table against each work.
   - Issued by one of the agencies indicated in the clause 16.0 of the Schedule.9
9. Pre bid meeting will be held at the Board Room, University of Jaffna, Thirunelvely at 10.00 hrs on the 11th July, 2025.

**Chairman,**
**Department Procurement Committee,**
**University of Jaffna,**
**01.07.2025**

(C-3305)

# கண்ணீர் அஞ்சலி

வேலணைப் பிரதேச செயலக
தையல் போதனாசிரியர்
திருமதி **கஜேந்திரன் நளினி**
அவர்களின் அன்புத் தாயார்

## அமரர் செல்வேந்திரன் நகுலாம்பிகை



அவர்கள் காலமான செய்தி அறிந்து துயர் அடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கின்ற குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள் நலன்புரிச் சங்கம்**

(1280)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

# சேவை நலன் பாராட்டு



## திரு.சிவபாதசுந்தரம் சத்தியசீலன்

இலங்கை நிர்வாக சேவை விசேட தரம்
(SLAS I) பிரதேச செயலாளர், பிரதேச செயலகம்,
வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை.

**சேவைக்காலம் : 01.01.2024 - 01.07.2025**

வடமராட்சி வடக்கில் நயப்புறு சேவையாற்றி
ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் போசகராய் வழிகாட்டி
பிரதேச உயர்வுக்கும் மக்கள் நலனுக்கும் உரமூட்டி
பண்பால் உயர்ந்து பணிவால் செழிப்புற்று – இன்று
பதவி உயர்வால் எமைப் பிரிந்து செல்லும்
மதிப்புறு பிரதேச செயலருக்கு மாண்புறு வாழ்த்துக்கள்

Congratulations

வாழ்த்துவோர்:
அனைத்து உத்தியோகத்தர்கள்,
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம்,
வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை.

(C-3306)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் வடக்கு- கிழக்கு ஆசியாவின் இஸ்ரேலாக மாறும்!



## அபேதிஸ்ஸ தேரர் ஆவேசம்

(கொழும்பு) ..........................................

**இந்தியாவின் 29 ஆவது மாநிலமாக இலங்கையை மாற்றியமைக்கும் பல செயற்பாடுகள் இரகசியமான முறையில் முன்னெடுக்கப்படுவதை அறிய முடிகிறது. இவ்வாறு இடம்பெற்றால் ஆசியாவின் இஸ்ரேலாக இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் மாற்றமடையும் அதன் பின்னர் இலங்கைக்குள் எல்லையை பாதுகாக்க வேண்டிய போராட்டம் தலைதூக்கும் என தேசிய பாரம்பரியத்தை பாதுகாப்பதற்கான அமைப்பின் தலைவர் மெதகொட அபேதிஸ்ஸ தேரர் தெரிவித்தார்.**

சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்காக இலங்கையில் 21 இராமர் கோயில்களை நிர்மாணிப்பதாக இந்தியா குறிப்பிடுகிறது. இந்து பிராமண சூழலில் பௌத்த மதம் பாதுகாக்கப்படாது. இதனால் தான் இந்தியாவில் பௌத்த மதம் இல்லாதொழிந்தது. இவ்வாறான நிலை இலங்கையில் ஏற்பட இடமளிக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையின் நட்பு நாடு என்று குறிப்பிட்டுக் கொண்டு இந்தியா ஆரம்ப காலத்தில் இருந்து இலங்கைக்கு பல்வேறு நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் எந்த கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அவர்கள் ஊடாக தமது நிகழ்ச்சி நிரலை செயற்படுத்திக் கொள்ளவே இந்தியா முயற்சிக்கும்.

திருகோணமலைத் துறைமுகம் பற்றி தற்போது எவரும் கவனம் செலுத்துவதில்லை. திருகோணமலைத் துறைமுகம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் இந்தியா பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொண்டுள்ளது. இந்த செயற்றிட்ட வலயத்துக்குள் புராதன கோயில்கள் மற்றும் பௌத்த விகாரைகள் உள்ளன.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் இந்திய ஆட்சியாளர்களால் பலவந்தமான முறையில் இலங்கைக்கு திணிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தால் பல விளைவுகள் ஏற்பட்டன. நீதிமன்ற உத்தரவினால் தான் இந்த ஒப்பந்தம் இன்றும் இழுபறிநிலையில் உள்ளது. இந்த ஒப்பந்தத்தின் உள்ளடக்கங்களை செயற்படுத்துமாறு இந்தியா இன்றும் இலங்கைக்கு அழுத்தம் பிரயோகிக்கிறது.

இந்தியாவுடன் இன்று ஏற்றுக்கொள்ளப்படும் ஒப்பந்தங்கள் எதிர்காலத்துக்கும் தாக்கம் செலுத்தும் என்பதை ஆட்சியாளர்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்தியாவுடன் அண்மையில் பாதுகாப்பு, வலுசக்தி மற்றும் டிஜிற்றல் துறை தொடர்பில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. இந்த ஒப்பந்தங்களின் உள்ளடக்கத்தை அரசாங்கம் இது வரையில் பகிரங்கப்படுத்தவில்லை.

இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்டுள்ள பாதுகாப்பு சார்ந்த ஒப்பந்தத்தில் இலங்கை இராணுவத்தை இரண்டாம் நிலையாக்கும் வகையில் பல ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. கனடா, பிரித்தானியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்ட விடுதலை புலிகள் அமைப்பை இலங்கை இராணுவத்தினர் இல்லாதொழித்தார்கள். மகாநாயக்க தேரர்கள் மற்றும் இராணுவத்தினர் இலங்கையின் காவல் தெய்வங்கள் என்பதை ஆட்சியாளர்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

வலுசக்தி தொடர்பில் இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் இலங்கையில் சுயாதீனம் மற்றும் இறையாண்மையை பாதிக்கும் வகையில் பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. பங்களாதேஷ் நாட்டின் வலுசக்தியை இயக்கும் அதிகாரம் இந்தியாவிடம் உள்ளது. ஆகவே வலுசக்தி துறையின் இறையாண்மையை இந்தியாவிடம் விட்டுக் கொடுத்து நாட்டைக் காட்டிக் கொடுக்க முடியாது. இந்தியாவுடன் இந்த அரசாங்கம் கைச் சாத்திட்டுள்ள ஒப்பந்தங்களுக்கு நாட்டு மக்கள் அனுமதியளிக்க வில்லை. மக்கள் விடுதலை முன்னணி தான் அனுமதியளித்துள்ளது. (நி)

---

## நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் ஆரம்பம்

(கொழும்பு)

தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, இந்த சிறப்பு நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் ஜூலை 5 ஆம் திகதி வரை செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில், ஆண்டின் கடந்த ஐந்து மாதங்களில் அதிக எண்ணிக்கையிலான நோயாளிகள் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, ஏப்ரல் மாதத்தில் 5,175 டெங்கு நோயாளிகளும், மே மாதத்தில் 6,025 டெங்கு நோயாளிகளும் பதிவாகியுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. தற்போது வாரத்திற்கு சுமார் 1,500 டெங்கு நோயாளிகள் பதிவாகி வருவதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி)

---

## = பாட வேளைகள் = போதுமானதாக இல்லை

### கல்வி பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

அரசாங்க பாடசாலைகளில் ஒரு பாடத்திற்கான கற்பித்தல் நேரத்தை 45 நிமிடங்களிலிருந்து 50 நிமிடங்களாக அதிகரிப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாக கல்விப் பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

சில பாடங்களை கற்பிப்பதற்காக ஒதுக்கப்பட்ட நேரம் போதுமானதாக இல்லை என பிரதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வாரம் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ள ஆசிரியர் பயிற்சி கல்வித் திட்டங்களின் போது இது குறித்து இறுதி முடிவு எட்டப்படலாம் என பிரதியமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், பாடசாலை நேர நீட்டிப்பு தொடர்பாக இதுவரை கல்வி அதிகாரிகளுக்கு வழிகாட்டுதல்கள் அனுப்பப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (நி)

---

## மின்சார திருத்தச் சட்ட மூலம் அரசியலமைப்பிற்கு முரணானது!

### உயர்நீதிமன்றம் தெரிவிப்பு

(கொழும்பு)

மின்சார திருத்தச் சட்டமூலம் மீதான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை அறிவித்த பாராளுமன்ற பிரதி சபாநாயகர் கலாநிதி ரிஸ்வி சாலிஹ், முன்மொழியப்பட்ட சட்டத்தின் பல பிரிவுகள் அரசியலமைப்பிற்கு முரணாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். பல பிரிவுகள் அரசியலமைப்பை மீறுவதாகவும், பாராளுமன்றின் விசேட பெரும்பான்மை மற்றும் பொது வாக்கெடுப்பின் ஒப்புதலை மின்சார திருத்த சட்டமூலம் பெற வேண்டுமென நீதிமன்ற தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் பிரதி சபாநாயகர் பாராளுமன்றில் குறிப்பிட்டார்.

எனினும், உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள பரிந்துரைகளின்படி தொடர்புடைய பிரிவுகள் திருத்தப்பட்டால் இந்த அரசியலமைப்பு முரண்பாடுகள் ஏற்படாது என்றும் பிரதி சபாநாயகர் தெளிவுபடுத்தினார்.

நேற்றைய சிறப்பு பாராளுமன்ற அமர்வின் போதே பிரதி சபாநாயகர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார். (நி)

---

## 2,138 ஊழல் குற்றச்சாட்டுகள்

(கொழும்பு)

கடந்த 5 மாதங்களில் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு பெறப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 2,000ஐ தாண்டியுள்ளது.

அதன்படி, 2025 ஜனவரி 1 முதல் 2025 மே 31 வரை கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை 2,138 ஆகும் என ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

2024 ஆம் ஆண்டு நிலுவையில் உள்ள முறைப்பாடுகள் உட்பட, தற்போது ஆணைக்குழுவிடம் உள்ள மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 2,221 என்றும் கூறப்படுகிறது.

இவற்றில், 224 முறைப்பாடுகளை விசாரிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. அதே நேரத்தில் 524 முறைப்பாடுகளுக்கு போதுமான ஆதாரங்கள் இல்லாததாலும், சட்டத்திற்குப் பொருத்தமற்றதாலும் விசாரிக்கப்படாமல் இருக்க முடிவு செய்யப்பட்டுள்ளன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வணங்காமண் மறுவாழ்வு கழகம் நடத்தும்

# கிளித்தட்டு இறுதிப் போட்டியில் யாழ். மாவட்ட ஏ அணி சம்பியன்



வணங்காமண் மறு வாழ்வு கழகம் பெருமையுடன் நடத்திய வடக்கு கிழக்கு இணைந்த வணங்காமண் வெற்றிக் கிண்ணம் 2025ஆம் ஆண்டுக்கான மாபெரும் கிளித்தட்டுப்போட்டியானது நேற்று முன்தினம் சிறப்புற இடம்பெற்றிருந்தது.

வணங்காமண் மறுவாழ்வு கழகத்தால் நடத்தப்படுகின்ற வணங்காமண் வெற்றிக் கிண்ண கிளித் தட்டு சுற்றுப்போட்டியின் ஆரம்பப் போட்டியானது கடந்த மாதம் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று அதன் ஸ்தாபகரும், தலைவருமான தர்ம லிங்கம் ஜீவரத்தினம் தலை மையில் கதிரவன் விளையாட்டுமைதானத்தில் ஆரம்பிக்கப்பட்டு நேற்று முன்தினம் இறுதி போட்டியானது கரடிபிலவு, பழம்பாசி, ஒட்டுசுட்டான் பகுதி கதிர வன் விளையாட்டு மைதானத்தில் சிறப்புற இடம் பெற்றிருந்தது.

ஆரம்பப் போட்டி ஒவ் வொரு மாவட்ட ரீதியாகவும் இடம்பெற்று ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் மூன்று அணிகள் தெரிவு செய்யப்பட்டு போட்டிகள் இடம்பெற்று அதில் தெரிவு செய்யப்படும் அணிகள் இறுதிப் போட்டியில் பங்குபற்றியிருந்தது.

இறுதிப்போட்டியில் யாழ் மாவட்ட ஏ அணியும், கிளிநொச்சி மாவட்ட ஆதவன் அணியும் பலப்பரீட்சையில் ஈடுபட்டிருந்தனர். விறுவிறுப்பாக இடம் பெற்ற போட்டியில் 4:3 என்ற ரீதியில் 4 பழங்களை எடுத்து யாழ் அணியினர் வெற்றியை தமதாக்கி கொண்டனர். அத்தோடு யாழ் மாவட்ட பி அணியினர் மூன்றாம் இடத் தையும் பெற்றுக் கொண் டிருந்தனர்.



குறித்த போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற அணிக்கு ஒரு லட்சம் ரூபா பணப் பரிசும், இரண்டாம் இடத்தைப் பெற்ற அணிக்கு 50,000 ரூபாய் பணப்பரிசும்மூன்றாம் இடத்தை பெற்ற அணிக்கு 30,000 ரூபாய் பணப் பரிசும், வெற்றி பெற்ற அணிகளுக்கான பிர மாண்ட வெற்றிக் கேடயமும், அனைத்து வீரர்களுக்குமான வெற்றிப் பதக்கங்களும் வழங்கிக் கௌர விக்கப்பட்டிருந்தனர்.

மாலை நிகழ்வாக தமிழர் பாரம்பரிய கலை நிகழ்வுகளாக சிவலீமன் தற்காப்பு கலைமன்ற மாணவர்கள் வீரதீர தற்காப்பு கலைகளா கிய சிலம்பம், சுருள்வாள், தீப்பந்தம், வாள், கேடயம் போன்ற கலைகளை பாபு மாஸ்டரின் தலைமையில் நடத்தப்பட்டிருந்தது.

இதன்போது பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் செயற்பாட்டினை ஊக்குவிக்கும் நோக்குடன் கற்றல் உப கரணங்களும், துவிச்சக்கரவண்டியும் வழங்கி வைக்கப்பட்டிருந்தது. (3-299)


## மரண அறிவித்தல்

தோற்றம் 03 - 08 - 1948

மறைவு 30 - 06 - 2025



### ஜோண்பிள்ளை மேரி செலின் (லீலா)

குளமங்கால் மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜோண்பிள்ளை மேரிசெலின் (லீலா) அவர்கள் நேற்று (30.06.2025) திங்கட்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து - லூர்தம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிங்கராசா ஜோண்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் சிங்கராசா - ஞானம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் உதயராஜ் (UK), மாலினி (UK), மைக்கல்ராஜ் (UK), அருள்ராஜ் (UK), ஜோண்ஷி ஆகியோரின் அன்புத் தாயாரும் தர்சினி (UK), ஆன் (UK), திருஞானம் (UK), லொறிங்ரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் இரத்தினசிங்கம், லில்லிமலர், றஞ்சிதமலர், பிறீடா, ஞானதாஸ், காலஞ்சென்ற இராசமலர், இராஜசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் அஷாந், லிவோண், எமாயா, அரோண், பெமிஷா, ஜனோஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் நல்லடக்கம் நாளை (02.07.2025) புதன்கிழமை பி.ப 3.00 மணிக்கு குளமங்கால் புனித சவேரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித சவேரியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குளமங்கால், மல்லாகம். (1281)

தகவல் : குடும்பத்தினர் 076 712 1989


## பிரதேச செயலகங்களுக்கிடையிலான

# மெய்வல்லுநர் போட்டியில் தெல்லிப்பளை பிரதேசசபைக்கு தங்கம்




யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மெய் வல்லுநர் போட்டிகள் யாழ் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் பெண்களுக்கான 400 மீற்றர் சட்டவேலி ஓட்டத்தில் தெல்லிப்பளை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த வை. உமாசங்கவி தங்கப் பதக்கத்தையும், தெல்லிப்பளை பிரதேச செய லகத்தை சேர்ந்த கே.நிருபா வெள்ளிப் பதக்கத்தையும், நல்லூர் பிரதேச செயலகத்தை சேர்ந்த ஏ.சுபோ வெண்கலப் பதக்கத்தையும் கைப் பற்றினர்.

அத்துடன் பெண்களுக்கான 4X100 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் தெல்லிப் பளை பிரதேச செயலக அணி 55.1 செக்கன்களில் ஓடி புதிய சாதனையைப் பதிவு செய்து தங்கப் பதக்கத்தை யும் சாங்கானை பிரதேச செயலகம் வெள்ளிப் பதக்கத்தையும் கரவெட்டி பிரதேச செயலகம் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர். (3-90)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுச்சீட்டு பெறுவதற்கு மீண்டும் 'டோக்கன்' முறை

## குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

கடவுச்சீட்டுக்களை பெற்றுக் கொள்வதற்காக இனிமேல் டோக்கன் வழங்கப்படுமென குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.

ஜுலை 2 ஆம் திகதி முதல் இத்திட்டம் நடைமுறைக்கு வரவுள்ளது. திணைக்களம் விடுத்துள்ள விசேட அறிவித்தலிலே இதுபற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பத்தரமுல்லையில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தில் ஒரு நாள் மற்றும் சாதாரண சேவையின் கீழ் கடவுச்சீட்டுக்களை பெற்றுக்கொள்வதற்கான டோக்கன் விநியோகம் இடம்பெறும்.

இந்த டோக்கன் வழங்கும் நடவடிக்கையானது முற்பகல் 6.30 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை மேற்கொள்ளப்படும். (நி)

# வீதியை விட்டு விலகிய பேருந்து மரத்தில் மோதி விபத்து



(கல்முனை)

கதிர்காமம் சென்று திரும்பிய யாத்திரிகர்களை இறக்கி விட்டுச் சென்ற பேருந்து வீதியை விட்டு விலகி மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்துச் சம்பவம் காத்தான்குடி கிரான்குளம் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

மட்டக்களப்பு - கல்முனை சாலை வழியே தேற்றாத்தீவு நோக்கி சென்ற பேருந்து கிரான்குளம் பகுதியில் வீதியை விட்டு விலகி மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த பேருந்தில் சாரதி, நடத்துநர்கள், கதிர்காமம் புனித யாத்திரையை நிறைவு செய்த யாத்திரிகர்கள் உள்ளிட்டோர் பயணித்தனர்.

விபத்து நிகழ முன்பு கதிர்காம யாத்திரிகர்களை ஆரையம்பதியில் இறக்கி விட்டு சாரதி உட்பட மூவர் பயணித்த போதே இந்த விபத்து சம்பவித்தது.

இதனால் அதிஷ்டவசமாக கதிர்காம யாத்திரிகர்கள் விபத்தில் சிக்காமல் தப்பினர். அத்துடன் பேருந்தில் இருந்த மூவரும் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

மேலும் விபத்தில் பேருந்து பெருமளவில் சேதமடைந்துள்ளதுடன் பேருந்து மோதிய மரமும் முறிந்து விழுந்துள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி)


## கட்டைவேலி-நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்-கரவெட்டி

பதிவு இலக்கம்:- J/1553 பதிவு திகதி:- 16.02.1971

### வாக்காளர் பட்டியல் காட்சிப்படுத்தல்

எமது சங்கத்திற்கு புதிய கிளைக்குழுக்களை தெரிவு செய்வதற்கு 30.06.2025 ஆம் திகதியில் வாக்களிக்க தகைமையுடைய வாக்காளர் பட்டியல் 01.07.2025 ஆம் திகதி தொடக்கம் 14.07.2025 ஆம் திகதி வரை தலைமை காரியாலயத்திலும் கீழ்க்கண்ட விபரப்படியான கிளைகளிலும் காட்சிபடுத்தப்படுகிறது. இப்பட்டியல் தொடர்பில் ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் 17.07.2025 ஆம் திகதிக்கு முன்னதாக சங்கத்தின் செயலாளருக்கு எழுத்து மூலம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.


| தொ.இல | கிளை இலக்கம் | கிளை விபரம் | வாக்காளர் பட்டியல் காட்சிபடுத்தப்பட்டுள்ள கிளை விபரம் |
|---|---|---|---|
| 01 | 01 | அல்வாய் தெற்கு A (மாலிச்சந்தி) | வதிரி வடக்கு (டைமன்) |
| 02 | 02 | அல்வாய் தெற்கு-மத்தி (முத்துமாரியம்மன்) | அல்வாய் தெற்கு B (மனோகரா) |
| 03 | 03 | கட்டைவேலி | கிழவித்தோட்டம் |
| 04 | 04 | கல்வத்தை | கல்வத்தை |
| 05 | 05 | கணுவில் | கணுவில் |
| 06 | 06 | கரவெட்டி மேற்கு (அந்திரான்) | இராசகிராமம் |
| 07 | 07 | கரவெட்டி கிழக்கு (தச்சை ஐங்கரன்) | பிரதான கூ. நகர் (சம்மந்தர் கடை) |
| 08 | 08 | கோவிற்கடவை | கணுவில் |
| 09 | 09 | நெல்லியடி | கல்வத்தை |
| 10 | 10 | நுகவில் | சண்டில் |
| 11 | 11 | சந்திரா | கிழவித்தோட்டம் |
| 12 | 12 | சண்டில் | சண்டில் |
| 13 | 13 | துன்னாலை தெற்கு (குடவத்தை) | யார்க்கரு |
| 14 | 14 | கிளான் | யார்க்கரு |
| 15 | 15 | வதிரி | வதிரி |
| 16 | 16 | யார்க்கரு | யார்க்கரு |
| 17 | 19 | துன்னாலை வடக்கு A (வல்லியானந்தம்) | கணுவில் |
| 18 | 20 | துன்னாலை வடக்கு B (துன்னாலை மத்தி) | கணுவில் |
| 19 | 21 | அல்வாய் தெற்கு B (மனோகரா) | அல்வாய் தெற்கு B (மனோகரா) |
| 20 | 23 | கிழவித்தோட்டம் | கிழவித்தோட்டம் |
| 21 | 24 | இராசகிராமம் | இராசகிராமம் |
| 22 | 25 | வதிரி வடக்கு (டைமன்) | வதிரி வடக்கு (டைமன்) |
| 23 | 30 | அல்லையம்பதி | கணுவில் |

செயலாளர்,
கட்.நெல்.ப.நோ.கூ.சங்கம்

021 226 3263 (சி-3302)



## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலயத்தின்
ஆசிரியர்
திருமதி. ஆன் டெய்சி
அவர்களின்
அன்புத் தந்தையார்

அமரர். துரையப்பா கிறிஸ்தோப்பர்

மலர்வு:- 15.12.1943 உதிர்வு:- 29.06.2025

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(c-3303)

தங்கள் பிரிவால் துயருறும்
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/நாவற்குழி மகா வித்தியாலயம்.


# இராசிபலன்

01.07.2025
ஆனி 17, செவ்வாய்க்கிழமை
சஷ்டி பிற்பகல் 1.41 மணிவரை
பூசம் பிற்பகல் 12.26 மணிவரை

சுப நேரம் 10.26-11.56 மணிவரை
இராகுகாலம் 2.56-4.26 மணிவரை
குமார சஷ்டி விரதம், சித்தாமிர்தம்

சந்திராஷ்டமம்
திருவோணம், அவிட்டம்

வளவன்

**மேஷம்** – புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய தொழில் தொடங்க எடுத்த முயற்சிகள் கைகூடும், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்** – செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, வாக்கு மேன்மையுண்டு, காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்** – பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மகரம்** – பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, குடும்பத்தில் சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

**ரிஷபம்** – வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வழிபாடு காரிய வெற்றி தரும்.

**சிம்மம்** – ஆன்றோர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், கற்பனை மிகுதியான நாள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** – தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், தன்னம்பிக்கை அதிகரிக்கும், போசன சுகமுண்டு.

**கும்பம்** – வாழ்க்கைத்துணை வழியே வரவுகள் வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு.

**மிதுனம்** – செய்தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.




**கன்னி** – அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், ரோக பயமுண்டு.

**தனுசு** – வழிபாடு ஆனந்தம் தரும், குடும்பத்தினரிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**மீனம்** – செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், உடல் நலனில் இருந்த பாதிப்புக்கள் விலகும், பொது வாழ்வில் கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

கனவு என்பது உனது வாழ்வின் முடிவு அல்ல, ஆரம்பம் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் மகோற்சவம் நேற்றையதினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

யுத்தம் காரணமாக ஏற்பட்ட இடப்பெயர்வினால் கடந்த 35 ஆண்டுகளாக கொடியேற்ற நிகழ்வு இடம்பெறாத நிலையில் கடந்த ஏப்ரல் மாதம் ஆலய மகாகும்பாபிஷேகம் நடைபெற்று நேற்றைய தினம் மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (படங்கள்: சிவசாந்தன்)

# யாழ்.கொடிகாமம் பகுதியில் அபாய நிலையில் புகையிரதக்கடவை

## பொதுமக்கள் அச்சம்



(யாழ்ப்பாணம்)

யாழ். கொடிகாமம் பகுதியில் உள்ள புகையிரதக் கடவை மிகவும் அபாயமான நிலையில் காணப்படுவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

கொடிகாமம் இராமாவில் முருகன் ஆலயத்திற்கு அண்மையிலுள்ள புகையிரதக் கடவையே இவ்வாறு காணப்படுகின்றது.

குறித்த புகையிரதக் கடவையில் இரு மருங்கிலிலுமுள்ள பாதுகாப்புக் கம்பங்கள் காணப்படாத அதேவேளை கடந்த 2 மாதங்களுக்கு மேலாக கடவைக் காப்பாளர் கடமையில் ஈடுபடவில்லை எனவும் இதனால் பெரும் விபத்துக்கள் சம்பவித்து உயிரிழப்புகள் ஏற்படுவதற்கான அபாயம் உள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மக்கள் மிகுந்த அச்சத்துடனேயே குறித்த புகையிரதக் கடவையை கடக்கும் நிலையே காணப்படும் அதே வேளை விபத்து ஒன்று சம்பவிக்க இருந்த நிலையில் அப்பகுதியில் நின்ற மக்களின் விரைந்த செயற்பாட்டால் அது தடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்களான சி.பிரபாகரன், செ.மயூரன் ஆகியோரிடம் மக்கள் விடயத்தை தெரியப்படுத்தினர்.

இதையடுத்து பிரதேச சபை உறுப்பினர்கள் இருவரும் குறித்த புகையிரதக் கடவையை பார்வையிட்டனர்.

எனவே புகையிரதத் திணைக்கள அதிகாரிகள் இது தொடர்பில் உடனடியாக கவனமெடுத்து விபத்து ஏற்பட்டு உயிரிழப்புக்கள் ஏற்படுவதற்கு முன் குறித்த கடவைக்கு காப்பாளரை விரைவாகக் கடமையில் ஈடுபடுத்தி விபத்துக்களை தடுத்து மக்களை பாதுகாக்குமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8)

# யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை 20 ஆண்டுகள் பூர்த்தி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சட்டத்துறை ஆரம்பிக்கப்பட்டு இருபது ஆண்டுகள் பூர்த்தியாகுவதையொட்டி பல்கலைக்கழக சட்டத்துறையின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை விசேட நிகழ்வொன்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக உயர் நீதிமன்ற நீதிபதி ஏ.எச்.எம்.டி.நவாசும் கௌரவ விருந்தினராக சட்டத்தரணி மாலா சபாரத்தினமும் கலந்து கொண்டனர்.

குறித்த நிகழ்வில் யாழ்ப் பாணப் பல்கலைக்கழக சட்டத் துறை தொடர்பான ஆவணப் படமொன்று வெளியிடப்பட்டது.

சட்டமா அதிபர் திணைக் களத்தின் அரச சட்டவாதி நிஸாந்தவின் நெறியாள்கையில் நடைபெற்ற குழு விவாதத்தில் இலங்கை சட்டக் கல்லூரி அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி பிரசாந்தலால் டி அல்வீஸ், சட்டத்தரணி எல்.இளங்கோவன், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து, சட்டத்தரணி எர்மிசா டெகல், சட்டத்தரணிலக்ஷ்மனன் ஜெயகுமார் ஆகியோர் நேரடியாக பங்கேற்றதுடன் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் சட்டத்தரணி ரஜீவ் அமரசூரிய இணைய வழியில் இணைந்தார்.

இதன்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சிவகொழுந்து சிறீசற்குணராஜா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதிபேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரகுராம், யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் மருதலிங்கம் பிரதீபன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறைதலைவர் கோசலை மதன், நீதிபதிகள், சட்டத்தரணிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், சட்டத்துறை மாணவர்கள் எனப் பல ரும் கலந்துகொண்டனர். (8-33)

# மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை இடம் பெறவுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணி முதல் பூர்வாங்கக் கிரியைகள் இடம் பெற்று நாளை புதன்கிழமை அதிகாலை 5 மணி முதல் நடராஜர் ஆனி உத்தர அபிஷேகமும் தொடர்ந்து நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகமும் நடைபெறும். பின்னர் காலை 8 மணி பூஜை வழிபாடுகள் நடைபெற்று காலை 9 மணியளவில் திருக்கல்யாண வைபவமும் இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து பெருமான் திருமஞ்சத்தில் திரு வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறவுள்ளதென ஆலய பரிபாலன சபையினரும், யாழ். பல்கலைக்கழக இந்து மன்றத்தினரும் அறிவித்துள்ளனர். (3)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 300 | 350 | 250 | 350 |
| உருளைக்கிழங்கு | 180 | 190 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 700 | 500 | 600 |
| தக்காளி | 250 | 250 | 350 | 200 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 280 | 250 | 250 |
| கோவா | 300 | 450 | 400 | 300 | 400 |
| கரட் | 500 | 400 | 500 | 400 | 400 |
| பூசணி | 140 | 150 | 150 | 120 | 200 |
| புடோல் | 120 | 150 | 200 | 100 | 200 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 70 | 150 |
| சின்ன வெங்காயம் | 350 | 150-350 | 400 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 120 | 180 | 130 | 120 | 150 |
| பாகற்காய் | 650 | 500 | 700 | 450 | 800 |
| வெண்டக்காய் | 150 | 150 | 200 | 100 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 350 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 350 | 400 | 300 | 300 | 300 |
| லீக்ஸ் | 300 | 450 | 400 | 250 | 300 |
| பீற்றூட் | 250 | 300 | 350 | 250 | 300 |
| கறிமிளகாய் | 600 | 600 | 700 | 450 | 800 |
| முருங்கைக்காய் | 1000 | 1100 | 1000 | 800 | 800 |
| போஞ்சி | 600 | 600 | 800 | 500 | 800 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 350 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 80 | 20-100 | 200 | 60 | 100 |
| தேசிக்காய் | 300 | 250 | 350 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 160 | 180 | 250 | 80-160 | 150-200 |
| இராசவள்ளி | 600 | 600 | 600 | 500 | 800 |
| வெங்காயப்பூ | 500 | 500 | 600 | -- | 500 |
| முள்ளங்கி | 200 | 150 | 200 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | 200 | 150 | -- | 250 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவு அரசு எடுத்த நடவடிக்கை என்ன

## நாமல் எம்.பி கேள்வி

(கொழும்பு)

அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவு தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆளுந்தரப்பை நோக்கி கேள்வியெழுப்பியுள்ளார். நேற்று பாராளுமன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்,

வெளிநாட்டிலிருந்து அரிசி கொண்டுவரும்போது கொமிசன் அடிப்பதாக குற்றம் சுமத்தியிருந்தீர்கள். ஆனால் தற்போது விவசாயிகளுக்கு வழங்கப்படும் உரமானது தரமானதாக இல்லை. இதற்கு தீர்வு வழங்க எவருமில்லை. இன்னொருபுறம் வெளிநாட்டிலிருந்து அரிசியையும் உப்பையும் இறக்குமதி செய்வது தொடர்பில் அரசாங்கம் உரையாடிக்கொண்டிருக்கிறது. கடந்த காலத்தைப்பற்றி பேசிக் கொண்டிருந்தால் விவசாயிகளுக்கு நியாயம் கிடைக்காது. வரியை அதிகரித்து வருமானத்தை ஈட்டுவதால் எந்தப்பயனும் இல்லை.

கடன்களை செலுத்துவதற்கான திட்டங்கள் இருக்க வேண்டும். இப்படியே போனால் வாழ்க்கைச் செலவு அதிகரிக்கும். அது குறித்து என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள் எனக் கேள்வியெழுப்பியுள்ளார். (நி)

# பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம்

(கொழும்பு)

இலங்கை பொலிஸ் துறையின் பல சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டு புதிய பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய பொலிஸ் ஆணையத்தின் ஒப்புதலுடன் இந்த இடமாற்றங்கள் மற்றும் நியமனங்கள் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி)

# வரி விதிப்பால் புத்தகங்களின் விலை உயர்வு

(கொழும்பு)

அச்சிடப்பட்ட புத்தகத்தின் விலை 20 சதவீதம் அதிகரித்துள்ளதாக தேசிய புத்தக வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி விதிக்கப்பட்டதால் இவ்வாறு அச்சிடப்பட்ட புத்தகத்தின் விலை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. உலகின் வேறு எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு எங்கள் புத்தகங்களுக்கு வற் வரி அறவிடப்படுவதாக தேசிய புத்தக வர்த்தகர்கள் சங்கத்தின் புரவலர் காமினி மொரகொட தெரிவித்துள்ளார். தேசிய புத்தக வர்த்தகர்கள் சங்கத்தின் வருடாந்த, ஆண்டு விழாவில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கூறுகையில், "இலங்கையில் 75 ஆண்டுகளாக நடை முறையில் இல்லாத வற் வரி, ஜனவரி 2024 முதல் விதிக்கப்பட்டதால் புத்தக விற்பனை அழிவடைந்து வருகிறது. இது தொடருமாக இருந்தால் ஒரு பிள்ளைக்கு கூட புத்தகம் வாங்க முடியாத நிலை ஏற்படும். உலகின் வேறு எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு எங்கள் புத்தகங்களுக்கு வற் வரி அறவிடப்படுகின்றது." எனத்தெரிவித்தார். (நி)


புங்குடுதீவு மேற்கு 4 ஆம் வட்டாரம் பிட்டியம்பதி



அருள்மிகு ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாள்


இரதோற்சவம் 01.07.2025 செவ்வாய்க்கிழமை







இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு இரதோற்சவம் காணும் அருள்மிகு ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாளின் இரதோற்சவ வடம் தொட்டிழுத்து அவள் அருளைப் பெற்றுய்யும் பேற்றைப் பெறுவோமாக.



வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் தரும்
காளிகா பரமேஸ்வரித் தாயே
நாடி வந்தோம் உனையே
நாளும் எமக்கருள்வாய் தேவியே
பிணிதீர்க்கும் உன் அடி நிழலே
நின் பணி செய்து கிடக்கிறோம்
உன் கடைக் கண் கொண்டு பாரம்மா

இரதோற்சவம் சிறப்புற வாழ்த்துவோர்
9 ஆம் திருவிழா உபயகாரர்

(சி-3304)





சுழிபுரம்- பறாளாய்

இன்று ஈசுர விநாயகர் தேர்த் திருவிழா

காலம் :- 01.07.2025 செவ்வாய்க்கிழமை
நேரம் :- மு.ப 11.30 மணியளவில் தேர்ப்பவனி

(பஞ்சமுக அர்ச்சனை - காலை 9.00 மணி) (விசேட வசந்த மண்டபப் பூஜை - காலை 10.00 மணி)

மஹோற்சவகுரு
"வித்தியாசாகரம்" சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள் அவர்கள்
(ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் உபதேசத் திருக்கோவில், சண்டிலிப்பாய்)

(சி-3301)

சோழியூரான் பிறைசூடிக்குரு, ஆன்மீகவாதியும் சந்ததிப்பூசகரும், பரம்பரைப் பரிபாலகரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பாகிஸ்தானில் பெய்த கனமழை 45 பேர் உயிரிழப்பு



(இஸ்லாமாபாத்)

மழைக்காலம் தொடங்கிய சில நாட்களில் பாகிஸ்தானில் பெய்த கனமழை மற்றும் திடீர் வெள்ளத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 45 ஆக உயர்ந்துள்ளது.


ஆப்கானிஸ்தானின் எல்லையில் அமைந்துள்ள கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் அதிக எண்ணிக்கையிலானோர் உயிரிழந்துள்ளனர்.

இதில் 10 குழந்தைகள் உட்பட 21 பேர் உயிரிழந்தனர்.

ஸ்வாட் பள்ளத்தாக்கில் 14 பேர் இறந்ததாக பேரிடர் மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது.

அங்கு ஆற்றங்கரையில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் குடும்பங்கள் அடித்துச் செல்லப்பட்டதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி)

## பனியால் சூழப்பட்டுள்ள அட்டகமா பாலைவனம்!



(சிலி)

உலகின் மிகவும் வரட்சியான பாலைவனமான அட்டகமா பாலைவனம், பனியால் சூழப்பட்டுள்ளதாக ஆய்வுத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடல் மட்டத்திலிருந்து 2,900 மீற்றர் (9,500 அடி) உயரத்தில் அமைந்துள்ள ALMA ஆய்வகம் இந்தத் தகவலை தனது X பக்கத்தில் காணொளியுடன் பதிவேற்றியுள்ளது.

வடக்கு சிலியில் அமைந்துள்ள குறித்த பாலைவனம் பல தசாப்தங்களாக அதிநவீன தொலைநோக்கிகளின் தாயகமாக இருந்து வருகிறது.

அட்டகமாவில் உள்ள ALMA ஆய்வகத்தின் முக்கிய பிரிவு, 10 ஆண்டுகளாக அந்த பாலைவனத்தில் பனி பொழியவில்லை என்று தெரிவித்துள்ளது.

சென்டியாகோ பல்கலைக்கழகத்தின் காலநிலை விஞ்ஞானி ரவுல் கோர்டெரோ, இந்தப் பனிப்பொழிவைக் காலநிலை மாற்றத்தில் ஒன்று என நிர்ணயிப்பது அவ்வளவு எளிதானதல்ல.

இனிவரும் காலங்களில் இவ்வாறான அதிசய நிகழ்வுகள் அடிக்கடி நிகழும் என்ற வகையிலும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார். (நி)




## 477 ட்ரோன்க...

# உக்ரை... உக்கிர...

(கீவ்)

**போர் தொடங்கியதில் இரு... முந்தினம் மிகப்பெரிய... தாக்குதலை ரஷ்யா தொடுத்து... உக்ரைன் அரசு தெரிவித்துள்...**



கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைன் மீது, 2022 பெப்ரவரியில் ரஷ்யா போர் தொடுத்தது. மூன்று ஆண்டுகளைக் கடந்தும், இந்தப் போர் தொடர்கிறது. அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் உதவியுடன் உக்ரைன் அரசு, ரஷ்ய படைகளை எதிர்த்து வருகிறது.

சமீபத்தில் ரஷ்ய எல்லைக்குள் சென்று உக்ரைன் படையினர் நடத்திய தாக்குதலால், இரு நாடுகளுக்கும் இடையேயான போர்ப்பதற்றம் அதிகரித்துள்ளது.

இந்நிலையில், உக்ரைனின் கெர்சன், லிவிவ் மாகாணங்களைக் குறிவைத்து ரஷ்ய படையினர் "ட்ரோன்" மற்றும் ஏவுகணை தாக்குதல்களை தொடுத்தனர்.

உக்ரைன் எல்லைக்குள், 477 ட்ரோன்கள் மற்றும் 60 ஏவுகணைகள் என மொத்தம் 53... நா... பல... கிய...

பல... இத... பல... பெ... உ... ளத...

நட... ட்ரோ...

## எவரெஸ்டிலுள்ள குப்பைகளை அகற்றும் ட்ரோன்கள்

எவரெஸ்ட் சிகரத்தில் அதிகமானோர் ஏறுவதால், குப்பைகளும் அதிகமாகக் குவிகின்றன.

எவரெஸ்டில் 50 தொன் கழிவுகள் மற்றும் 200 சடலங்கள் உள்ளன.

இந்தக் கழிவுகள் ட்ரோன்கள் மூலம் அகற்றப்படுகிறது.

5-6 மணிநேரம் எடுக்கும் ஒரு வேலையை, ட்ரோன்களால் வெறும் 10 நிமிடங்களில் திறம்படச் செய்துவிட முடிகிறது என சாகர்மாதா மாசு கட்டுப்பாடு கமிட்டியின் தலைமைச் செயல் அதிகாரியான ஷெரிங் ஷெர்பா தெரிவித்தார்.

தொழிலாளர்கள் சில ...ரின் வாழ்வாதாரத்தை



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# வெளிநாடு

## ...கள் | 60 ஏவுகணைகள்

# ...ரன் மீது ரஷ்யா ...ர தாக்குதல்!

...ருந்து நேற்று ... வான்வழித் ...துள்ளது என, ...ள்ளது.





537 வான்வழி ஆயுதங்களை ஒரே நாளில் ரஷ்யா ஏவி, அந்நாட்டு படையினரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

இதுகுறித்து உக்ரைன் விமானப் படையின் செய்தித்தொடர்பாளர் யூரி இஹ்னாட் கூறுகையில், “ரஷ்ய படையினர் ஒரே நாளில், மிகப் பெரிய வான்வழித் தாக்குதலை உக்ரைன் மீது தொடுத்துள்ளது.

மேற்குப் பகுதிகளை குறிவைத்து நடத்தப்பட்ட இத்தாக்குதலில், 475 ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகள் இடைமறித்து அழிக்கப்பட்டன.

எனவே, இத்தாக்குதலால், பெரிய பாதிப்புகள் எதுவும் ஏற்படவில்லை,” என்றார்.

இதற்கிடையே, இத்தாக்குதலில் கெர்சன் மாகாணத்தில் ஒருவர் கொல்லப்பட்டதுடன், ஆறு பேர் படுகாயமடைந்ததும் தெரியவந்துள்ளது.

இதே போல் லிவிவ் மாகாணத்தில் நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதலில், அங்குள்ள தொழிற்சாலையில் மிகப்பெரிய தீ விபத்து ஏற்பட்டது.

இதன் காரணமாக, அங்கு ஒரு பகுதி முழுதும் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

முன்னதாக, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், துருக்கியில், உக்ரைனுடன் மீண்டும் பேச்சு நடத்த ரஷ்யா தயாராக உள்ளது என்றார்.

எனினும், உக்ரைன் மீது முன் எப்போதும் இல்லாத வகையில் மிகப் பெரிய வான்வழித் தாக்குதலை ரஷ்ய படையினர் அரங்கேற்றியது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. (நி)



இது பறித்துவிடும் என அஞ்சுகின்றனர்.

ஆனால் “நாங்கள் வாழ்வாதாரத்தை அழிக்கவில்லை.

அவர்களின் உயிரை காப்பாற்றியுள்ளோம்.

அந்த உயர[illegible] (நி)

கிலோ எடை 100 கிலோவை போல் உணர வைக்கும்.

இப்படியொரு ஆபத்தான பணியை ட்ரோன்கள் எடுத்துக் கொண்டுள்ளன எனத் தெரிவித்...

## தான்சானியாவில்

# நேருக்கு நேர் மோதி தீப்பிடித்து எரிந்த பேருந்துகள்!

### 40 பேர் உடல் கருகி உயிரிழப்பு



(தான்சானியா)

தான்சானியா நாட்டில் கிளிமஞ்சாரோ மோனி டங்கா சாலையில் உள்ள சபாசாபா பகுதியில் நேற்று முன்தினம் 2 பயணிகள் பேருந்து நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

மோதிய வேகத்தில் 2 பேருந்துகளும் தீப்பிடித்து எரிந்தன. இதனால் பயணிகள் வெளியில் வர முடியாமல் உயிர் பயத்தில் அலறினார்கள். இது பற்றி அறிந்ததும் தீயணைப்பு வீரர்கள் விரைந்து சென்று தீயை அணைத்தனர்.


ஆனாலும் 2 பேருந்துகளில் பயணம் செய்த பெண்கள், குழந்தைகள் உட்பட 40 பேர் உடல் கருகி பரிதாபமாக இறந்தனர்.

30இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தனர். அவர்கள் சிகிச்சைக்காக அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். இதில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இதனால் பலி எண்ணிக்கை உயரும் என அஞ்சப்படுகிறது.

திருமண நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக சென்றவர்கள் பேருந்தின் டயர் பஞ்சரானதால் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து மற்றொரு பேருந்துடன் நேருக்கு நேர் மோதியது என பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. (நி)

# தங்கச் சுரங்கம் இடிந்து 11 தொழிலாளர்கள் உயிரிழப்பு

## சூடானில் சோகம்



(கெய்ரோ)

ஆபிரிக்க நாடான சூடான் தங்கம் உற்பத்தியில் முன்னணியில் உள்ளது. இங்குள்ள கிழக்கு நைல் நதி மாகாணத்தில் உள்ள கெர்ஷ் அல்பீல் தங்கச் சுரங்கத்தில் கடந்த சனிக்கிழமை ஏராளமான தொழிலாளர்கள் பணியில் இருந்தனர்.

அப்போது அந்தச் சுரங்கம் திடீரென இடிந்து விழுந்தது. இதில் ஏராளமான தொழிலாளர்கள் மண்ணுக்குள் புதைந்தனர். இதில் 11 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். 7 பேர் காயத்துடன் மீட்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த விபத்து சம்பவம் சூடானில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. அங்கு தரமற்ற பாதுகாப்பு நடைமுறைகளால் அடிக்கடி விபத்துகள் நடந்து வருவதாக மனித உரிமை ஆர்வலர்கள் குற்றம் சாட்டி வருகின்றனர்.

தங்கச் சுரங்கம் இடிந்து விழுந்த விபத்தில் 11 தொழிலாளர்கள் பலியானது அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்ச்சைக்குரிய கொள்கலன் விவகாரம்

# உத்தரவாதம் தந்தால் உண்மையை வெளிப்படுத்துவேன்

## அர்ச்சுனா எம்.பி பகிரங்கம்



(கொழும்பு)

விடுவிக்கப்பட்ட சர்ச்சைக்குரிய 323 கொள்கலன்களின் உள்ளே என்ன இருந்தது. அவைகள் எங்கிருந்து வந்தது என்பது தொடர்பில் முழுமையான தகவல்களை தன்னால் வழங்க முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில் விடுவிக்கப்பட்ட சர்ச்சைக்குரிய 323 கொள்கலன்களின் உள்ளே என்ன இருந்தது. அவைகள் எங்கிருந்து வந்தது என்பது தொடர்பில் முழுமையான தகவல்களை தன்னால் வழங்க முடியும்.

ஆனால், அதற்காக என் மீது போதைப்பொருள் வழக்கில் பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்தி, எனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை பறிக்கப்போவதில்லை என்று அரசாங்கம் உத்தரவாதம் வழங்க வேண்டும்.

இல்லையெனில், நான் வேறு நாட்டிற்கு ஓடிப்போய் அதை அம்பலப்படுத்த வேண்டியிருக்கும் எனத் தெரிவித்தார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1998- இந்து
நட்சத்திரம்: ரோகினி
உயரம்: 6"
தகைமை/தொழில்: O/L,சவுதி
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15746

பிறப்பு:1988-இந்து
நட்சத்திரம்:திருவோணம்
உயரம்:6"
தகைமை/தொழில்- Psychology(கனடா)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15748

பிறப்பு: 1994-இந்து
நட்சத்திரம்: சதயம்
1 இல் செவ்
கி-பா-52
உயரம்:5'5"
தகைமை/தொழில்:BE, Engineer(pvt)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15749

பிறப்பு: 1994- இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி-பா: 13
உயரம்:5'7"
தகைமை/தொழில்-மருந்தாளர்(லண்டன்)
எதிர்பார்ப்பு: பட்டதாரி(லண்டன்)
தொ.இ: B/15750

பிறப்பு: 1993- இந்து
நட்சத்திரம்:சுவாதி
2இல் சூரிசெவ்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: Driver(மலேசியா)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15751

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1991-இந்து
நட்சத்திரம்: கேட்டை
8 இல் செவ்
கி-பா: 77
உயரம்: 5"
தகைமை/தொழில்: BSc,TO
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண். விவாகரத்தானவர்
தொ.இ: G/15759

பிறப்பு-2003-இந்து
நட்சத்திரம்-பூரட்டாதி
12 இல் செவ்
கி-பா-11 1/2
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/15760

பிறப்பு-2001-இந்து
நட்சத்திரம்-ஆயிலியம்
கி-பா:2 1/2
உயரம்-5'3"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/15762

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்:சதயம்
கி.பா-29
உயரம்: 5'2"
தகைமை/தொழில் - LLB, Lawyer
எதிர்பார்ப்பு:சட்டத்தரணி.பொறியியலாளர். வங்கி
தொ.இ: G/15767

பிறப்பு-1998-இந்து
நட்சத்திரம்:கேட்டை
உயரம்: 5'5"
தகைமை/தொழில்-BSc,Civil Engineer (pvt)
எதிர்பார்ப்பு: Engineer(Australia)
தொ.இ: G/15774

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் (406)

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# மகிழ்ச்சியும் உல்லாசமும்!

"அவருக்கு என்ன சார்? ஏழெட்டு கார் இருக்கு நாலஞ்சு பங்களா இருக்கு ஆனந்தமாக இருக்கிறார்!" என்று சில பேரைப் பார்த்து நமக்கு சொல்லத்தோன்றும்!

அவர்களையே கொஞ்சம் நெருங்கி ஆராய்ந்து பார்த்தால் நம்மை விட அதிகமாக அவஸ்தைப்பட்டுக் கொண்டிருப்பார்கள்.

பல சினிமா, நட்சத்திரங்களையும் பிரமுகர்களையும் பார்க்கும் போது நாம் அப்படித்தான் நினைக்கிறோம்.

ஆடம்பரமான கார் அழகான பங்களா, விருந்து பார்ட்டி என்று இருப்பதைப் பார்க்கும் போது நமக்கு அப்படித்தான் தோன்றுது! அவர்களுடைய இன்னொரு பக்கத்தை ஆராய்ந்து பார்த்தால். மனத்தளர்ச்சி போதைப் பழக்கம் மதுப்பழக்கம் - இல்வாழ்க்கையில் சிக்கல்கள் குடும்பத்திலே கோளாறுகள் பிள்ளைகள் சரியில்லை - தனிமை இப்படி ஏகப்பட்டது இருக்கும்.

ஆடம்பரமாகவும் உல்லாசமாகவும் இருக்கின்ற ஒருவரைப் பார்த்து அவர் ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறார் என்று நாம் நினைத்து விடுகிறோம்.

விடயம் தெரிந்தவர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? 'Fun' என்கிறது வேறு, Happiness என்கிறது வேறு! என்கிறார்கள்! அதாவது ஆடம்பரம் உல்லாசம் என்கிறது வேறு! ஆனந்தம் என்கிறது வேறு! பல, விபரம் தெரிந்தவர்கள் கூட, இது இரண்டும் ஒன்று என்றுதான் நினைத்துக்கொண்டிருகிறார்கள். அப்படி இல்லை! அது இரண்டும் வேறு வேறு. உல்லாசம் வேறு, ஆனந்தம் வேறு. அதாவது Fun வேறு Happiness வேறு ஒன்று, நடக்கும் பொழுதே அனுபவிப்பது உல்லாசம். அது நடந்த பிறகு அனுபவிப்பது ஆனந்தம்! ஆனந்தம் என்கிறது ஆழமான உணர்வு! உள்ளார்ந்த உணர்வு! இப்ப.

சினிமா பார்க்கின்றோம ரீ.வி பார்க்கின்றோம். கிரிக்கெட் மட்ச் பார்க்கின்றோம். பார்க்கிற வரைக்கும் நல்ல பொழுது! உல்லாசமாக இருக்கிறது! வண்டலூர் போகிறோம். மகாபலிபுரம் போகிறோம். சுத்துற வரைக்கும் உல்லாசம்!

நமது பிரச்சினைகளை தற்காலிகமாக மறுக்கிறோம்! மனது லேசாக ஆகுது! சிரிக்கிறோம்!

எல்லாம் சரி! இருந்தாலும் இதெல்லாம் உண்மையான மகிழ்ச்சியை ஏற்படுத்திவிடாது! ஏன் என்றால் இதனுடைய பயன்கள் (Positive Effects) நாம் பார்த்துக்கொண்டிருக்கிற வரைக்கும்தான் நம் உல்லாசம் அதைவிட்டு வெளியே முடிந்து போகுது! அதுதான் "FUN" என்கிறது! வந்ததும்

ஒரு நிகழ்ச்சி முடிந்த பிறகு நீடிக்கிறது தான் Happines உண்மையான மகிழ்ச்சியை உல்லாசமான வழியிலே அடைந்துவிட முடியாது! அதற்குக் கொஞ்சம் சிரமப்பட வேண்டியிருக்கும்.

அதனாலே பலபேர் உண்மையான மகிழ்ச்சி அடைவதற்கு முயற்சி செய்வதில்லை. நழுவிப் போய் விடுகிறார்கள்.

உல்லாசமாக இருக்க வேண்டும் என்பதற்காக சில பேர் திருமணமே வேண்டாம் என்று இருக்கிறார்கள்!

தனியாக வாழ்க்கை நடத்துவது குழந்தை வேண்டாம் என்று நினைப்பது - உல்லாசமாக இருக்கலாம். உற்சாகமாகத் தோன்றலாம். ஆனால் ஒரு குழந்தையாலே ஏற்படக்கூடிய மகிழ்வை அவர்கள் இழந்து விடுகிறார்கள்!

**"குழலினிது யாழினிது என்ப தம்மக்கள் மழலைச் சொல் கேளாதவர்"** என்று சொன்னாரே திருவள்ளுவர்.

அதோடு அர்த்தமும் ஆனந்தமும் அவர்களுக்குத் தெரியாமலே போய்விடுது! இப்ப உண்மையான மகிழ்ச்சியை அடைவதற்கு என்ன வழி? அடுத்தவர்களிடம் அன்பு செலுத்துங்கள். ஊருக்கும் உலகத்துக்கும் நல்லது செய்யுங்கள். உங்களாலே முடிஞ்ச சேவையை செய்யுங்கள்.

அதுதான் அதற்கு வழி என்கிறார் அந்தப் பெரியவர், புதுக்கார் புதுச்சட்டை போட்டுக்கொள்பவர்கள் எல்லாம் FUN.

அப்படிப்போட்டிருக்கிறவர்கள் எல்லாம் ஆனந்தமானவர்கள் என்று நாம் நினைக்கிறோம்.

உல்லாசம் உண்மையான மகிழ்ச்சியைக் கொண்டு வராது என்ற உண்மையைப் புரிந்துகொண்டால் போதும் உடனே நம் வாழ்க்கை முறையை மாற்றிக்கொள்வோம். ஒரு புது உலகத்திலே அடியெடுத்து வைப்போம்! புதுசா கல்யாணம் ஆன ஒரு தம்பதி.

தேனிலவுக்குப்போய் வந்தார்கள் போயிட்டு வந்ததும் அந்தப் பெண் சொன்னாள், "எங்கள் பிரயாணம் உல்லாசமாகவும் இருந்தது சந்தோஷமாகவும் இருந்தது!" என்று. "எந்த ஊருக்குப் போய் விட்டு வந்தீர்கள்?" என்று கேட்டார்கள்.

"அவர் ஊட்டிக்குப் போய்விட்டு வந்தார். நான் கொடைக்கானல் போய்விட்டு வந்தேன்." என்றாள் அந்தப் பெண்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை, கிளிநொச்சி மாவட்டங்களில் 79437 வெடிபொருட்கள் மீட்பு

## ஸார்ப் நிறுவனம் தெரிவிப்பு



(கண்டாவளை)

வட மாகாணத்தின் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் 34 இலட்சத்து 51 ஆயிரத்து 541 சதுரமீற்றர் பரப்பளவில் இருந்து 79 ஆயிரத்து 437 (79 437) அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.

வடபகுதியில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றும் பணிகளை முன்னெடுத்து வரும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் வெடிபொருள் அகற்றல் செயற்பாடுகள் தொடர்பில் நேற்று அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் வறிக்கையில், இலங்கையின் வடபகுதியில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றலில் ஜப்பான் மற்றும் அமெரிக்கா நாட்டு நிதியுதவியுடன் ஈடுபடும் ஸார்ப் மனிதாபிமானக் கண்ணிவெடியகற்றும் அரச சார்பற்ற நிறுவனமானது 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2024 ஜூன் மாதம் 26 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவின் கீழுள்ள தச்சடம்பன் அம்பகாமம் ஒலுமடு மற்றும் மாங்குளம், கொக்காவில் பகுதியிலும் ,புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவின் கீழுள்ள பகுதியிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலை கிளாலி இயக்கச்சி மற்றும் ஆனையிறவிலும் கண்டாவளை பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள தட்டுவன்கொட்டி பகுதியிலும் 34 இலட்சத்து 51 ஆயிரத்து 541 சதுரமீற்றர் பரப்பளவில் இருந்து 79ஆயிரத்து 437 (79437) அபாயகரமான வெடி பொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.

தொடர்ந்து இந்நிறுவனம் கண்ணிவெடியகற்றும் பணிகளை புதுக்குடியிருப்பு அம்பகாமம், மாங்குளம், கொக்காவில் தட்டுவன்கொட்டி கிளாலி மற்றும் ஆனையிறவிலும் துரித கதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (8-315)

# ஹயஸ் வாகனம் - மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி விபத்து



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில ஹயஸ் வாகனமும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி தீக்கிரையாகியுள்ளது.

பூநகரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மன்னார் வீதியில் உள்ள பூநகரி மத்திய கல்லூரிக்கு அருகாமையில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.விபத்தில் மோட்டார் சைக்கிள் மற்றும் ஹயஸ் வாகனம் தீக்கிரையாகியுள்ளது.

மேலதிக விசாரணைகளை பூநகரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(8-100)

# எல்லை தாண்டிய மீன்பிடி

## 8 மீனவர்களும் விளக்கமறியலில்

(மன்னார்)

தலைமன்னார் கடற்பரப்பில் கைதான இராமேஸ்வரம் மீனவர்களை எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதவான் நேற்று முன்தினம் மாலை உத்தரவிட்டார்.

இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்க சென்று நேற்று முன்தினம் அதிகாலை எல்லை தாண்டி மீன்பிடித்ததாக மன்னார் வடக்கு கடற்பரப்பில் வைத்து மீனவர்கள் 8 பேரை தலைமன்னார் கடற்படையினர் கைது செய்தனர்.

தலைமன்னார் கடற்படையினர் விசாரணைகளைத் தொடர்ந்து குறித்த மீனவர்களை மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளின் பின்னர் குறித்த மீனவர்களை மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த மீனவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தர விட்டமை குறிப்பிடத்தக்கது. (8-285)

# நேர அட்டவணை பிரச்சினை

## தீர்க்க வலியுறுத்தி பணிப்புறக்கணிப்பு

(கருமபுரம்)

வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபை நேர அட்டவணை பிரச்சினையை தீர்க்க வலியுறுத்தி இலங்கை போக்குவரத்துச்சபை கிளிநொச்சி சாலை ஊழியர்கள் நேற்றைய தினம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள னர்.

பணிப்புறக்கணிப்பு காரணமாக கிளிநொச்சி சாலையிலிருந்து கிளிநொச்சி மாவட்டத்திற்கான எந்த சேவையும் இடம்பெறவில்லை என தெரி விக்கப்படுகின்றது. வட்டக்கச்சி, உருத்திரபுரம், பூநகரி ,முழங்காவில் போன்ற பகுதிகளுக்கான பேருந்து சேவைகள் இடம் பெறவில்லை எனவும் குறித்த பகுதிகளில் நேரம் தொடர்பாக தனியார் பேருந்துகளுடன் பிரச்சினை ஏற்படுவதாகவும் பிரச்சினையை தீர்ப்பதற்கு வட மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தே கிளிநொச்சிசாலை ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். (8-316)



# வரணியில் மோட்டார் சைக்கிள் தீப்பிடித்துச் சேதம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரணி பகுதி யில் நேற்று ஞாயிற்றுக் கிழமை மாட்டுடன் மோதி விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிள் ஒன்று தீப்பிடித்து சேதமடைந்துள்ளது.

வரணி-மந்துவில் வீதியால் திடீரென வீதி க்கு குறுக்காக சென்ற மாட்டு டன் மோதுண்ட மோட்டார் சைக்கிளே இவ் வாறு தீப்பிடித்து எரிந்துள் ளது.

இவ் விபத்தில் மந்துவில் பகுதியைச் சேர்ந்த 38 வயதான நபர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (8-30)

# தேங்காய் எண்ணெய் என நினைத்து

## பெற்றோலை தீபத்தில் ஊற்றியதால் அனர்த்தம்



(வவுனியா)


வவுனியா பண்டாரிக்குளத்தில் உள்ள வீடு ஒன்றில் தீப்பற்றிய சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். நேற்றுக்காலை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் பூஜை அறையில் விளக்கு ஏற்றுவதற்காக தேங்காய் எண்ணெயினை பயன்படுத்துவதற்குப் பதிலாக தவறுதலாக பெற்றோலினைப் பயன்படுத்தியமையாலேயே குறித்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

மேலும், குறித்த வீட்டார் இது தொடர்பாக வவுனியா மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவுக்கு அறிவித்த நிலையில் சம்பவ இடத்திற்கு சென்ற தீயணைப்புப் பகுதியினர் பொது மக்களின் உதவியுடன் தீயினைக் கட்டுக்குள் கொண்டு வந்திருந்தனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் வவுனியா பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை, பெற்றோல் தட்டுப்பாடு ஏற்படும் எனக் கருதி பூஜை அறைக்குள் வைக்கப்பட்டிருந்த பெற்றோலையே மாறி தேங்காய் எண்ணெய் என நினைத்து பயன்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-8-250)





அச்சுவேலி மத்திய கல்லூரி பாடசாலைச் சமூகத்தின் ஏற்பாட்டில் போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் நடைபவனி ஒன்று கடந்த 28 ஆம் திகதி நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாத இராசி பலன்கள்-2025

## மனதில் மகிழ்ச்சியான எண்ணங்கள் தோன்றும்



**கிரக நிலை-** தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சுக்கிரன் - தைரிய வீரிய ஸ்தானத்தில் சூரியன், குரு - சுக ஸ்தானத்தில் புதன் - பஞ்சம ஸ்தானத்தில் செவ்வாய், கேது - லாப ஸ்தானத்தில் சனி, ராகு என கிரகங்கள் வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றம்:** 02.07.2025 அன்று லாப ஸ்தானத்தில் சனி வக்கிரம் ஆரம்பிக்கிறார். 03.07.2025 அன்று சுக ஸ்தானத்தில் புதன் வக்கிரம் ஆரம்பிக்கிறார். 17.07.2025 அன்று தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து சூரியன் சுக ஸ்தானத்திற்கு மாறுகிறார் 17.07.2025 அன்று புதன் பகவான் சுக ஸ்தானத்தில் இருந்து தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26.07.2025 அன்று தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து சுக்கிரன் தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 29.07.2025 அன்று பஞ்சம ஸ்தானத்தில் இருந்து செவ்வாய் ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** இந்த மாதம் ராசிநாதன் செவ்வாய் தனது சஞ்சாரத்தின் மூலம் துணிச்சலான சில முடிவுகளை எடுக்க வைப்பார். உங்களுக்கு நன்மைகளை அள்ளித் தருவார். மனதில் மகிழ்ச்சியான எண்ணங்கள் தோன்றும். திடீரென்று அவசர முடிவை எடுக்க வேண்டியிருக்கும். கோபத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் நட்பு, உறவினர்களிடம் சுமூகமான நிலை நீடிக்கும்.

உல்லாச பயணம் செல்லும் வாய்ப்புகளும் கிடைக்கும். எதிலும் நிதானத்தை கடைப்பிடிப்பது நன்மை தரும். திருமண முயற்சிகள் கைகூடும். தடைபட்ட பண வரத்து தடை நீங்கி கைக்கு வந்து சேரும். மனதில் இருந்த குழப்பம் நீங்கி தைரியம் உண்டாகும். பிள்ளைகள் பற்றிய மனக் கவலை நீங்கும். கணவன்- மனைவிக்கிடையே இருந்து வந்த பிரச்சினைகள் தீரும்.

தந்தை வழியில் இருந்து வந்த பிரச்சினைகள் சரியாகும். தொழில் ஸ்தானத்தை சூரியன் பார்க்க இருக்கிறார். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட கூடுதல் லாபம் கிடைக்க பெறுவீர்கள். வழக்குகளில் சுமூக முடிவுகள் வந்து சேரும். வெளிநாட்டிற்கு வேலை, கல்வி தொடர்பாக செல்ல எடுக்கும் முயற்சிகள் சாதகமான பலன் தரும். எதிர்ப்புகள் அகலும். அரசியல் வாதிகளுக்கு தொழில் வியாபாரம் தொடர்பான போட்டிகளும் நீங்கும்.




நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். கலைத்துறையினருக்கு எதிர்பார்த்த லாபங்கள் கிடைக்கும். பெண்களுக்கு மனக்குறைகள் நீங்கி மனதில் நம்பிக்கை உண்டாகும். பண வரத்தும் கூடும். குடும்பத்தில் இருந்த பிரச்சினைகளும் தீரும். மாணவர்கள், ஆசிரியர்கள் கூறுவதைக் கேட்டு அதன்படி நடப்பதால் முன்னேற்றம் அடைவார்கள்.

**அஸ்வினி:** இந்த மாதம் பண வரத்து இருக்கும். எடுத்த முடிவை செயற்படுத்தும் முன் ஒரு முறைக்கு இருமுறை ஆலோசிப்பது நல்லது. எந்த ஒரு காரியத்திலும் அவசர முடிவு எடுக்க தூண்டும். வீண் வாக்குவாதங்களால் பகையை வளர்த்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது.

**பரணி:** இந்த மாதம் வீண் அலைச்சலுக்கு பிறகே எந்த ஒரு காரியமும் நடந்து முடியும். வியாபாரம் தொடர்பாக அலைய வேண்டி இருக்கும். வர வேண்டிய பாக்கிகள் தாமதமாக வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேல் அதிகாரி சொல்லிய ஒரு வேலையை முடிக்க அலைந்து திரிய வேண்டி இருக்கும். சக பணியாளர்களிடம் வீண் பேச்சுக்களை தவிர்ப்பது நல்லது.


**கார்த்திகை 1 ஆம் பாதம்:** இந்த மாதம் குடும்பத்தில் விருந்தினர் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்கு செல்ல வேண்டி இருக்கலாம். வெளிவட்டார பழக்க வழக்கங்களைக் குறைத்துக் கொள்வது நல்லது. கணவன், மனைவிக்கிடையே வாக்கு வாதம் ஏற்பட்டு சரியாகும்.

**பரிகாரம்:** அம்மனுக்கு நெய் விளக்கு ஏற்றி வலம் வர நன்மை உண்டாகும்.

**சந்திராஷ்டம தினங்கள்:** 07, 08

**அதிர்ஷ்ட தினங்கள்:** 22, 23, 24

## எல்லா நற்பலன்களும் வந்து சேரும்



**கிரக நிலை-** இராசியில் சுக்கிரன் - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சூரியன், குரு - தைரிய வீரிய ஸ்தானத்தில் புதன் - சுக ஸ்தானத்தில் செவ்வாய், கேது - தொழில் ஸ்தானத்தில் சனி, ராகு என கிரகங்கள் வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றம்:** 02.07.2025 அன்று தொழில் ஸ்தானத்தில் சனி வக்கிரம் ஆரம்பிக்கிறார். 03.07.2025 அன்று தைரிய வீரிய ஸ்தானத்தில் புதன் வக்கிரம் ஆரம்பிக்கிறார். 17.07.2025 அன்று தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து சூரியன் தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 17.07.2025 அன்று புதன் பகவான் தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26.07.2025 அன்று ராசியில் இருந்து சுக்கிரன் தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 29.07.2025 அன்று சுக ஸ்தானத்தில் இருந்து செவ்வாய் பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** இந்த மாதம் ராசிநாதன் சுக்கிரன் ராசியில் ஆட்சியாக இருக்கிறார். தடைப்பட்ட பணம் கைக்கு கிடைக்கும். எதிலும் தயக்கமோ, பயமோ இல்லாமல் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். அவசர முடிவுகளை எடுப்பதை தவிர்ப்பது நல்லது. வீடு, மனை, நிலம், வாகனம் போன்ற சொத்துக்களில் எடுக்கும் முயற்சிகள் வெற்றி கிடைக்கும்.

தொழில் ஸ்தானம் மிக பலமாக இருக்கிறது. தொழில் மாற்றம், உத்தியோக மாற்றம் போன்றவை உண்டாகலாம். எல்லா நற்பலன்களும் வந்து சேரும். பூர்வீகச் சொத்துக்கள் மூலம் இலாபம் கிடைக்கும். தர்ம காரியங்களில் நாட்டம் அதிகரிக்கும். வியாபாரம் செய்பவர்கள் சற்று கவனமாக இருப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு தாமதப்படலாம்.

வெளிநாடு செல்வதில் எதிர்பாராத சிக்கல் ஏற்படலாம். கவனம் தேவை. எதிர்பாலினத்தாரிடம் பழகும் போது எச்சரிக்கை அவசியம். கணவன் மனைவிக்கிடையே அடிக்கடி வாக்குவாதங்கள் உண்டாகலாம். அரசியல்வாதிகள் அடுத்தவர் பிரச்சினைகளில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது. கடன் கொடுப்பதில் மிகவும் கவனமாக இருப்பது நல்லது.

கலைத்துறையினருக்கு வாய்ப்புகள் வந்து குவியும். பெண்கள் இந்த மாதம் எதிலும் மிகவும் கவனமாக செயற்படுவது நல்லது. சுக ஸ்தானாதிபதி




சூரியன் மிக பலமாக இருக்கிறார். மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்துவது அவசியம். விளையாட்டுகளில் ஈடுபடும் போது கவனம் தேவை.

**கார்த்திகை 2, 3, 4-ஆம் பாதங்கள்:** இந்த மாதம் எந்தக் காரியத்திலும் அவசர முடிவு எடுக்காமல் இருப்பதும் வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்பதும் நல்லது. திட்டமிட்டபடி காரியங்களை செய்து முடிப்பீர்கள். பணவரத்து தாமதப்பட்டாலும் கையில் இருப்பு இருக்கும். நக்ஷத்ரநாதன் சூரியன் சஞ்சாரத்தால் வேளை தவறி சாப்பிட வேண்டி இருக்கும். முக்கியமான பணிகள் தாமதமாக நடக்கும்.

**ரோகிணி:** இந்த மாதம் வீண் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி சென்று விடுவது நல்லது. மற்றவர்களுக்கு உதவும் போது கவனமாக இருப்பது நல்லது. குருவின் பார்வை ராசியின் மீது படிவதால் உடல் ஆரோக்கியம் அடையும். மனதில் மகிழ்ச்சி உண்டாகும்படியான நிகழ்ச்சிகள் நடக்கும்.

**மிருகசீரிடம்1, 2,ஆம்பாதங்கள்:** இந்த மாதம் தொழில், வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் கடின உழைப்புக்கு பின் முன்னேற்றம் அடைவார்கள். எதிர்பார்த்த ஓடர்கள் வந்து சேரும். வாடிக்கையாளர்களை திருப்தி செய்யக் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையாகச் செயற்பட்டு பாராட்டு பெறுவார்கள்.

**பரிகாரம்:** வெள்ளிக்கிழமை தோறும் அருகிலிருக்கும் ஏதேனும் ஒரு ஆலயத்திற்குச் சென்று 11 முறை வலம் வரவும். பாடல் பெற்ற ஸ்தலமாக இருந்தால் நலம்.

**சந்திராஷ்டம தினங்கள்:** 09, 10, 11;

**அதிஷ்ட தினங்கள்:** 25, 26

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவுகளை எண்ணங்களாக மாற்றுங்கள்
எண்ணங்களைச் செயல்களாக மாற்றுங்கள்.
–A.P.J. அப்துல்கலாம்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆறிய கஞ்சி பழங்கஞ்சி என்பதன் பொருள் உணர்க!

தமிழ்ப் பழமொழி மிகப்பெரும் தத்துவங்களை உணர்த்துவன.

அந்தப் பழமொழிகளை மீறிய உண்மை எதுவுமாக இருக்க முடியாது.

அந்தவகையில் ஆறிய கஞ்சி பழங்கஞ்சி என்றொரு பழமொழி நம் தமிழ் மொழியில் உண்டு.

இதன் பொருள் எதையும் உடனடியாகச் செய்து முடிக்க வேண்டும். அதை ஆறப் போட்டால், பின்னர் அது ஆகாத காரியமாகிவிடும்.

அதாவது கஞ்சி காய்ச்சினால், அதனைச் சூட்டோடு குடிக்க வேண்டும். பின்னர் குடிக்கலாம் என்றால் அது பழைய கஞ்சியாகி விடும்.

ஆக, எதையும் உடனுக்குடன் செய்யும் போதுதான், அதனால் பயன் ஏற்படும்.

இதைவிடுத்து நாளை பார்க்கலாம். பின்னர் பார்க்கலாம் என்றால், அது நடக்கக்கூடிய காரியமல்ல.

இதற்கு நல்ல உதாரணம் எங்கள் நாட்டில் உள்ள இனப் பிரச்சினையாகும்.

இனப் பிரச்சினைக்கான தீர்வை ஆரம்ப கட்டங்களில் உடனடியாக எட்டியிருக்க வேண்டும். ஆனால் ஆட்சியாளர்கள் இனப் பிரச்சினைக்குத் தீர்வை எட்டாமல், காலம் கடத்துவதையே கடைப்பிடித்தனர்.

இதன் காரணமாக எத்தனை அழிவுகள், எத்தனை உயிரிழப்புகள், துன்பங்கள், இன்னும் நாட்டின் பொருளாதாரம் சிதலமடைந்து மக்கள் வாழ முடியாத அளவில் கடும் வறுமை ஏற்பட்டுள்ளது.

ஆம், தமிழ் மக்களும் இந்த நாட்டின் பிரஜைகள். அவர்களும் இந்த நாட்டில் சுதந்திரமாக வாழவேண்டும் என்ற நினைப்பு ஆளுந்தரப்புகளிடம் இருந்திருக்குமாயின், உலகில் இலங்கை சொர்க்க பூமியாக விளங்கியிருக்கும்.

என்ன செய்வது, தமிழ் மக்களை இந்த நாட்டில் இருந்து ஒழித்துக் கட்ட வேண்டும் என்ற உள்ளுணர்வு; எத்தனையோ அப்பாவி மக்களைக் கொன்று குவித்தது.

போர் முடிவுற்று 16 ஆண்டுகள் கடந்த போதிலும் போர் ஏற்படுத்திய வடுக்கள் இன்னமும் மனித எலும்புக்கூடுகளாக வெளிப்படுகின்றன.

இங்குதான் எதையும் ஆறப்போடாமல் உடனுக்குடன் செய்வதை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும்.

ஆம் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரிகள், வன்னிப் போரில் தமிழின அழிப்பை கட்டவிழ்த்துவிட்டவர்கள், ஆட்சியில் இருந்த போது இந்த நாட்டை சூறையாடியவர்கள் என அத்தனை பேரையும் விரைந்து கைது செய்து நீதிமன்றில் நிறுத்த வேண்டும்.

இதைச் செய்யாமல் தாமதிக்கின்ற ஒவ்வொரு கணமும் நிலைமை தலைகீழாக மாறலாம்.

எனவே ஆறிய கஞ்சி பழங்கஞ்சி என்ற தமிழ்ப் பழமொழியின் உண்மைத்தன்மையை அறிந்து உடனுக்குடன் காரியம் ஆற்ற கற்றுக் கொள்ள வேண்டும். இல்லையாயின் நிலைமை இன்னும் இறுக்கமாகிவிடும்.

# இந்திய மீனவர்கள் அத்துமீறினால் நிச்சயம் கைது செய்யப்படுவீர்கள்

## கடற்தொழில் அமைச்சர் இ.சந்திரசேகர்

இந்திய மீனவர்கள் எமது கடற்பரப்புக்குள் அத்துமீறக்கூடாது. அவ்வாறு அத்துமீறினால் நிச்சயம் கைது செய்யப் படுவீர்கள். படகுகள் பறிமுதல் செய்யப்படும் எனக்கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்கள் மூன்று மாதங்களுக்கு பிறகு மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளனர். படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. எமது கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்ததாலேயே அவர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

தயவு செய்து எமது கடற்பரப்புக்குள் வர வேண்டாம் என இந்திய மீனவர்களிடம் கேட்டுக் கொள்கின்றோம். அதே போல தடைசெய்யப் பட்ட ரோலர் படகு உள்ளிட்டவற்றை பயன்படுத்த வேண்டாம் எனவும் கேட்டுக்கொள்கின்றோம்.

எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தை நாசமாக்கிவிட்டு கடல்வளங்களை அழித்துவிட்டு எம்மை தொப்புள்கொடி உறவுகள் எனக் கூறுவதில் பயனில்லை. இனியும் அந்த விளையாட்டு வேண்டாம். எமது கடற்பரப்புக்குள் வரவேண்டாம். வந்தால் கைது செய்யப்படுவீர்கள். உடமைகள் பறிமுதல் செய்யப்படும்.

124 இற்கு மேற்பட்ட இழுவைப்படகுகள் மயிலிட்டியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. இவை தொடர்பில் இன்னும் ஓரிரு நாட்களில் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (ம-7,33)

# நடுத்தர தொழில் முனைவோருக்கு சாதகமான தீர்வுகளை வழங்குங்கள்

## அரசிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் பராட்டே சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் தொழில்முனைவோர் மற்றும் தொழிலதிபர்களின் சொத்துக்கள் ஏலம் விடும் நடவடிக்கைக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் நாட்டில் காணப்படும் பல நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முனைவோரின் சொத்துக்கள் மீண்டும் ஏலம் விடப்படவுள்ளது. எனவே அவர்களுக்கு சாதகமான தீர்வினை அரசாங்கம் வழங்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நேற்றுத் திங்கட்கிழமை (30) விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்தத்துறை நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 50 சதவீதத்துக்கும் அதிகமாக பங்களிக்கிறது. சுமார் 4 மில்லியன் மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குகிறது.

இவ்வாறு பராட்டே சட்டம் அமுலுக்கு வந்தால் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இத்தரப்பினரின் பங்களிப்பு குறையும் என்பதை ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் கருத்தில் கொள்ள வேண்டும். இது பொருளாதார வளர்ச்சியை நேரடியாகப் பாதிக்கும்.

நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோரின் சொத்துக்களை ஏலம் விடுவது அவர்களின் வணிக முயற்சிகளை சரிவுக்கு இட்டுச் செல்கின்றன.

இது மொத்த உள்நாட்டு உற்பத்தியைப் பாதிக்கிறது. வேலையின்மையை அதிகரிக்கச் செய்கின்றன. ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்குப் பதிலாக ஏற்றுமதியைக் குறைக்கிறது.

முந்தைய அரசாங்கமும் தற்போதைய அரசாங்கமும் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழிலதிபர்கள் மற்றும் தொழில் முனைவோரை ஏமாற்றியே வந்துள்ளன.

தேர்தலை நோக்கமாகக் கொண்டு பராட்டே சட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்தி வைத்தனர். தற்போது இந்த அரசாங்கமும் முந்தைய அரசாங்கத்தை போலவே எந்த சாதகமான தீர்வுகளையுமோ அல்லது மாற்றுத் தீர்வுகளையோ பெற்றுக் கொடுக்கவில்லை.

நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழிலதிபர்கள் மற்றும் தொழில் முனைவோர் பராட்டே சட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்தி, கடன் மற்றும் வட்டிச் சலுகைகளை எதிர்பார்த்தனர்.

அத்தோடு கடன் மறுசீரமைப்பையும் எதிர்பார்த்தனர். உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொவிட்-19 மற்றும் வங்குரோத்து நிலை காரணமாகவே இத்தரப்பினர் இந்நிலைக்கு தள்ளப்பட்டனர். எனவே அவர்களுக்கு ஒத்துழைப்பை வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

அவர்களின் கடன்களை மறுசீரமைத்தல், கடன்களைத் தள்ளுபடி செய்தல் மற்றும் வட்டியில் ஒரு பகுதியை தள்ளுபடி செய்தல் மூலம் அவர்களுக்கு மீள்வதற்கான வழிவகைகளைச் செய்து கொடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும். இந்தப் பிரச்சினையிலிருந்து அரசாங்கம் தப்பிக்க முடியாது என்றார். (ம-7)

### மட்டக்களப்பு ஆரையம்பதியில்

## பேருந்து சில்லுக்குள் அகப்பட்ட 3 வயதுக் குழந்தை உயிரிழப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - ஆரையம்பதி பகுதியில் பேருந்து சில்லுக்குள் சிக்குண்டு 3 வயதுக் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

ஆரையம்பதி பகுதியிலுள்ள ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் பெண் தனது 3 வயதுக் குழந்தையை நேற்று தொழிற்தளத்துக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

அங்கிருந்த பேருந்து ஒன்று பின்திசை நோக்கி நகர்ந்தபோது, அதன் சில்லுக்குள் அகப்பட்டு குழந்தை உயிரிழந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆரையம்பதி முதலாம் பிரிவு காளிகோவில் வீதியைச் சேர்ந்த ஆண் குழந்தை ஒன்றே உயிரிழந்தது.

குழந்தையின் சடலம் ஆரையம்பதி மருத்துவமனையில் வைக்கப் பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

### உணவு ஒவ்வாமை

## மட்டக்களப்பில் 22 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதி

மட்டக்களப்பு - கரடியனாறு பகுதியிலுள்ள பாடசாலையில் மாணவர்களுக்கு வழங்கப் பட்ட உணவு ஒவ்வாமை காரணமாக 22 மாணவர்கள் வைத்தியசாலையில் நேற்று (30) அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலையில் சத்துணவு திட்டத்தின் கீழ் சோறுடன் கோழி இறைச்சி தயாரித்து நேற்று பகல் 195 மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

இதனை உட்கொண்ட சில மாணவர்களுக்கு வயிற்றுவலி ஏற்பட்டதையடுத்து அவர்களை உடனடியாக அருகிலுள்ள கரடியனாறு பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் மேலதிக சிகிச்சைக்காக 16 மாணவர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து பொது சுகாதார பரிசோதகர்கள் குறித்த உணவை பரிசோதனை செய்ததுடன் வழங்கப்பட்ட கோழி இறைச்சி பனிக்கட்டியில் இருந்து எடுத்து தயாரிக்கப்பட்டுள்ளமை பொது சுகாதார பரிசோதகர்களின் சோதனையில் தெரியவந்துள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொக்கன் எழுதும் மொசாட் 02

**இஸ்ரேல்-ஈரான் யுத்தம் மூன்றாம் உலகப் போருக்கான தொடக்கப் புள்ளியாகப் பார்க்கப்பட்டது. ஈரானின் முக்கிய அனு விஞ்ஞானிகளை, இராணுவத் தளபதிகளை அடுத்தடுத்துப் படுகொலை செய்தது இஸ்ரேல்.**

**இத் தாக்குதலுக்கு இஸ்ரேலின் பலம் பொருந்திய உளவு அமைப்பான மொசாட் காரணம் என ஈரான் குற்றம் சாட்டியிருந்தது.**

**மொசாட் அமைப்பைச் சேர்ந்த பெண்ணொருவர் தனது பெயரை முஸ்லீம் பெயராக மாற்றி ஈரானுக்குள் நுழைந்து ஈரானின் முக்கிய தளபதிகள், மதத் தலைவர்கள் மற்றும் அரசியல்வாதிகள் ஒன்று கூடும் நிகழ்வுகளில் பங்குபற்றி அவர்களின் மனைவிகளுடன் பழக்கத்தை ஏற்படுத்தி அந்த நெருக்கத்தை மிகவும் நம்பிக்கையான உறவாக மாற்றி, ஈரானின் உச்ச பாதுகாப்பான, எவராலும் உட்செல்ல முடியாத பல இடங்களுக்குள் சர்வ சாதாரணமாக சென்று வரக்கூடிய நம்பிக்கைக் குரியவராக மாறினார்.**

**ஈரானின் முக்கிய அணு மின் நிலையங்கள் மீதான தாக்குதல் மற்றும் அணு விஞ்ஞானிகளின் படுகொலைகளுக்கு இப் பெண்ணே மூளையாகச் செயற்பட்டிருந்தார்.**

**இஸ்ரேலின் துல்லியமான தாக்குதல்களுக்கு காரணமானவர் குறித்த பெண் என ஈரான் அரசு அறியும் போது, அவர் ஈரானில் இருந்து தப்பிச் சென்றுவிட்டார்.**

**இந்நிலையில் இஸ்ரேலின் மிக முக்கியமான உளவு அமைப்பான மொசாட் தொடர்பில் வலம்புரி வாசகர்கள் அறியும் விதமாக சொக்கன் எழுதியதும் இத் தொடர் இங்கு பிரசுரமாகிறது.**

**(ஆ-ர்)**

ஆனால் கடைசி நேரத்தில் ஏதோ குழப்பமாகிவிட்டது. "பிளாக் செப்டம்பர் போராளிகள் தங்களுக்கு வலை விரிக்கப்பட்டிருப்பதை மோப்பம் பிடித்துவிட்டார்கள்.

அதன்பிறகு, அவர்கள் ஒரு விநாடி கூடத் தயங்கவில்லை. தங்களிடம் பிடிபட்டிருந்த ஒன்பது இஸ்ரேலிய வீரர்களையும் சுட்டுக் கொன்று விட்டார்கள். இந்தச் சண்டையில், பிளாக் செப்டம்பர் போராளிகள் பலர் கொல்லப்பட்டார்கள். சிலர் பிடிபட்டார்கள்.

ஆனால், என்ன பிரயோஜனம்? பதினொரு அப்பாவி இஸ்ரேலியர்களின் உயிர் போய்விட்டதே! உலகம் அதிர்ந்து நின்றது. சர்வதேச ஒற்றுமையின் அடையாளமாக மதிக்கப்படுகிற ஒலிம்பிக் போட்டிகளில் இப்படி ஒரு ரத்த ஆறு ஓடியிருக்கிறது என்பதை யாராலும் நம்பக்கூட முடியவில்லை.

முக்கியமாக, இஸ்ரேல் தேசமே கண்ணீரில் மூழ்கியது. எந்தத் தவறும் செய்யாத விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள் இப்படி இரக்கமில்லாமல் கொல்லப்பட்டிருப்பதை நினைத்தால் அவர்களுக்கு ரத்தம் கொதித்தது.

சாதாரணமாகவே, யூதர்களுக்கு ஜேர்மனி என்றால் ஆகாது. ஹிட்லர் காலத்தில் அங்கே ஏகப்பட்ட அப்பாவி யூதர்கள் கொத்துக்கொத்தாகக் கொல்லப்பட்டதை யாரால் மறக்கமுடியும்? இன்னும் அந்தக் கொடுமையின் காயங்களே ஆறாத சூழ்நிலையில், இப்போது அதே ஜேர்மனியில் மீண்டும் யூத ரத்தம் பாய்ந்திருக்கிறது. இன்னொரு வேதனை, இப்படிப் பதினொரு விளையாட்டு வீரர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்ட சூழ் நிலையிலும், ஒலிம்பிக் போட்டிகள் நிறுத்தப்படவில்லை. யூதர்களின் உயிர் அவ்வளவு மலிவாகி விட்டதா?

ம்யூனிக்கில் உயிர் இழந்த இஸ்ரேல் வீரர்களின் குடும்பத்தினர். "எங்களுக்கு நியாயம் வேணும்" என்று உரக்கக் குரல் எழுப்பினார்கள். "இந்தக் கொடுமையைச் செய்தவர்களைக் கண்டு பிடிக்கவேண்டும்". முறைப்படி தண்டனை கொடுக்க வேண்டும், இல்லை என்றால் எங்கள் மனது ஆறாது"

உடனடியாக, பிரதமர் கோல்டா மெய்ர் அவர்களைச் சந்தித்தார். "இது உங்களுடைய தனிப்பட்ட இழப்புமட்டும் இல்லை, நம் நாட்டுக்கே பெரிய அவமானம்" "அதற்கு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?"

"இதில் சம்பந்தப்பட்டவங்கள் எல்லோரையும் கண்டுபிடித்து வேட்டையாடப்போறோம்" என்றார் கோல்டா மெய்ர், "அவர்கள் உலகத்தின் எந்த மூலையில் இருந்தாலும் சரி, செய்த தவறுக்கான தண்டனையை அவர்கள் அனுபவித்தே தீர வேண்டும். பிரதமர் சொல்வதன் அர்த்தம், அந்தக் குடும்பத்தினருக்குச் சரியாகப் புரியவில்லை. வேட்டையாடுவதா? அப்படி என்றால்?

வேட்டை என்றால், ரத்த வேட்டைதான். இஸ்ரேலியர்களுக்கு எதிரான எந்தக் குற்றத்துக்கும் பழிக்குப் பழி வாங்கிப் பழகிய ஒரு திறமைசாலிக் குழு இருந்தது. அவர்களுடைய துணையோடு ம்யூனிக் விவகாரத்துக்குக் காரணமானவர்கள் அனைவரையும் களையெடுக்கத் தீர்மானித்து விட்டார் இஸ்ரேல் பிரதமர் கோல்டா மெய்ர்.

அந்தக் குழுவின் பெயர், "மொஸாட் இஸ்ரேலிய உளவுத்துறை! உலக அளவில் பல நூறு உளவுத்துறைகள் இருக்கின்றன. ஆனால் அவற்றையெல்லாம்விட மொஸாட்டின் திறமை தான் தனித்துவமானது என்று சொல்கிறார்கள்.



இதற்குக் காரணம், மற்ற நாடுகளுக்கெல்லாம் அவ்வப்போது ஒன்றிரண்டு அச்சுறுத்தல்கள் வரும், அதைக் கவனமாகச் சமாளித்தால் போதும், மற்றபடி அவர்களுடைய பிழைப்பு அமைதியாகதான் ஓடிக்கொண்டிருக்கும்.

ஆனால், இஸ்ரேல் என்கிற நாடு உருவாக்கப்பட்ட நாள் தொடங்கி, அச்சுறுத்தலின் நடுவே தான் வாழ்ந்துகொண்டிருக்கிறது. நான்கு பக்கங்களில் இருந்தும் ஆக்கிரமிக்கப் பார்க்கிற பக்கத்து நாட்டுக்காரர்களின் அடாவடி, போதாக் குறைக்கு, உள்ளிருந்தே அரிக்கிற கறையான்களின் தொல்லை.

இதனால், ஆரம்பத்திலிருந்தே இஸ்ரேலியர்களுக்கு உளவுத் துறை ஓர் அவசியத் தேவையாகி விட்டது. எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்கிற பயத்தில் அவர்களுடைய கண்களில் நிரந்தரமாக விளக்கெண்ணெய் சுரக்க ஆரம்பித்துவிட்டது.

உலகத்தின் அத்தனை முக்கிய நகரங்களிலும் மொஸாட் ஏஜென்ட்கள் இருந்தார்கள். அநேகமாக எல்லா அரசாங்க அமைப்புகள், இராணுவங்களிலும் அவர்களுடைய உளவாளிகள் ஊடுருவியிருந்தார்கள்.

இதனால், அமெ ரிக்காவுக்கே தெரியாத ரகசியங்கள் கூட, முதலில் மொஸாட்டுக்குக் கிடைத்துவிடும். பல சந்தர்ப்பங்களில் மொஸாட் அமெரிக்காவுக்குத் துப்புக் கொடுத்து, "சபாஷ்" வாங்கியிருக்கிறது.

தகவல் திரட்டுவது போலவே, அதிரடி நடவடிக்கைகளுக்கும் மொஸாட் பேர் போனது. இஸ்ரேலியர்களுக்கு எதிராகச் செயற்படக்கூடியவர்கள் உலகில் எங்கே ஒளிந்துகொண்டிருந்தாலும் சட்டையைப் பிடித்து இழுத்து வந்துவிடுவார்கள். இல்லாவிட்டால், இரகசியமாகப் போட்டுத் தள்ளிவிடுவார்கள், துப்பாக்கி தொடங்கி வெடிகுண்டுவரை அவர்களுக்குத் தெரியாத துஷ்ட ஆயுதங்களே கிடையாது.

இப்போது, பிரதமர் கோல்டா மெய்ர் மொஸாட்டை அழைத்தார். "உங்களுக்கு ஒரு சின்ன வேலை" "சொல்லுங்கள் மேடம்" "ம்யூனிக் விவகாரத்தைத் தலைகீழாப் புரட்டிப் போட்டுத் தேடுங்கள், பிளாக் செப்ரெம்பரில் முக்கியப் புள்ளிகள் யார் யார் என்று லிஸ்ட் மொத்தமும் எனக்கு உடனடியாக வேண்டும்." ஒகே மேடம், அப்புறம்?

"முதலில் லிஸ்ட் வரட்டும், அதுக்கப்புறம் என்ன செய்யலாம், எப்படிச் செய்யலாம் என்று யோசிப்போம்" மொஸாட் உளவாளிகள் வேலையில் இறங்கினார்கள். வேட்டை அதிகாரபூர்வமாகத் தொடங்கி விட்டது.

## 2. முதல் வேட்டை

ம்யூனிக் படுகொலையில் பங்கு பெற்ற "பிளாக் செப்ரெம்பர் போராளிகள் மொத்தம் எட்டு பேர். இவர்களில் ஐந்து போராளிகள் அங்கே விமான நிலையத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் கொல்லப்பட்டார்கள். மிச்சமிருந்த மூன்று பேரையும் ஜேர்மனி பொலிஸ் கைது செய்து உள்ளே தள்ளியது.

அப்படியானால், இப்போது மொஸாட் யாரைப் பழிவாங்கவேண்டும்? ம்யூனிக்கில் நேரடியாகக் களம் இறங்கிய எட்டு பேரும், ப்ளாக் செப்டம்பரின் அடிமட்ட ஊழியர்களாகத்தான் இருக்கவேண்டும். இவர்களைப் பழிவாங்கி எந்தப் பிரயோஜனமும் இல்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 39 கிலோ...

கிளிநொச்சி மயில்வாகனபுரம் பகுதியில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவல்களின் அடிப்படையில் சம்பவ இடத்துக்குச் சென்ற தருமபுரம் பொலிஸார் 39 கிலோ கேரள கஞ்சா மீட்கப்பட்டதுடன் கொழுந்து பிலவுப் பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய பெண் ஒருவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7,315)

## நெடுந்தீவு...

தேவநந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

தவிசாளர் பதவிக்காக இலங்கை தமிழ் அரசுக் கட்சி சார்பில் முன்மொழியப்பட்ட சங்கரப்பிள்ளை சத்தியவரதன் ஏகமனதாகத் தெரிவானார்.

உப தவிசாளராக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் முன் மொழியப்பட்ட செபஸ்ரியன் விமலதாஸ் தெரிவானார்.

13 உறுப்பினர்களைக் கொண்ட நெடுந்தீவு பிரதேச சபைக்காக நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி 6 ஆசனங்களையும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி 4 ஆசனங்களையும் தேசிய மக்கள் சக்தி இரண்டு ஆசனங்களையும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## பாலஸ்தீன...

"பாலஸ்தீனத்திற்கு சுதந்திரம் - யுத்தத்திற்கு எதிர்ப்பு" என்ற தலைப்பில் கொழும்பு கொம்பனித் தெருவில் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் சுதந்திர பாலஸ்தீனத்திற்கான இயக்கம் ஆகியவற்றைச் சேர்ந்த பெருமளவிலான மக்களால் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பாலஸ்தீன இனப்படுகொலையை உடன்நிறுத்து என்ற கருப்பொருளில் இஸ்ரேலுக்கும் அமெரிக்காவுக்கும் எதிரான எதிர்ப்பு ஆர்ப்பாட்டமாக இது அமைந்தது.

கொழும்பு கொம்பனித்தெரு மைதானத்திற்கு அருகிலிருந்து ஆரம்பமான எதிர்ப்பு ஆர்ப்பிட்டாட்டம் கொழும்பு - 03 கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள ஐக்கிய அமெரிக்கத் தூதுவராலயம் வரை நடைபவனியாகச் சென்று நிறைவடைந்தது. (ம-7)

## செம்மணி புதை...

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மனித எலும்புக்கூடுகளைக் கார்பன் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கான ஆய்வுகூடம் ஒன்றை வழங்குமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

மனிதப் புதைகுழி, காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினை எவ்வளவு ஆழமானது என்பதை நாம் அறிவோம். ஆகவே செம்மணி மனிதப் புதைகுழிக்கான நீதியை நீதிமன்றச் செயன்முறைக்கு உட்படுத்தப்பட்டு வழங்குவோம்.

அரசு என்ற ரீதியில் இந்த மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகளுக்கு மில்லியன் கணக்கான நிதியை ஒதுக்கியுள்ளோம் என்றார். (ம-7)

## செம்மணி புதைகுழிக்கு...

அதற்கான நீதியை வலியுறுத்தி திருகோணமலை பட்டணத்தெரு மக்களால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை குறித்த தீப்பந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் உள்ளிட்ட சங்கங்களின் பிரதிநிதிகள் கிராம மக்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது சுடர்கள் ஏற்றப்பட்டு பின்பு தீப்பந்தங்களைக் கைகளில் ஏந்தி ஊர்சுற்றி கடற்கரைக்குக் கொண்டு சென்று கடலில் விடப்பட்டன. (ம-7)

## அராலியில்...

இதில் அராலி மேற்கு வட்டுக் கோட்டையைச் சேர்ந்த செல்வராசா ஜெசிந்தன் (வயது 30) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த குடும்பஸ்தர் உடல் சுகவீனமுற்றுக் காணப்பட்ட நிலையில் அராலி மத்தியிலுள்ள குறி சொல்லும் கோவிலுக்கு நேற்று முன்தினம் சென்றுள்ளார். இந் நிலையில் அங்கிருந்த சாமியார் அவரது பிணியைப் போக்கு வதாகக் கூறி இளநீர் ஒன்றினை வழங்கியுள்ளார்.

அந்த இளநீரைக் குடித்த சிறிது நேரத்தில் குறித்த குடும்பஸ்தர் மயக்கி விழுந்து அந்த இடத்திலேயே உயிரிழந்தார். பின்னர் அவரது சடலம் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கு உடற்கூற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் மரணத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை.

மரண விசாரணைகளின்போது கடந்த சில மாதங்களுக்கு முன்னர் குறித்த குடும்பஸ்தர் நாய்க்கடிக்கு இலக்காகியுள்ளார் என்ற விடயம் தெரியவந்துள்ளது.

இந் நிலையில் அவர் நீர்வெறுப்பு நோய்க்குள்ளாகி இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. அந்த வகையில் அவரது உடற்கூற்று மாதிரிகள் பகுப்பாய்வுக்காக கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

மேலும் குறித்த நாய் சிலருக்குக் கடித்ததாகத் தெரியவந்துள்ள நிலையில் அவர்களைப் பரிசோதிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம-7,104)

## எரி...

ரூபாயாகும்.

இதேபோல மண்ணெண்ணெய் ஒரு லீற்றரின் விலை 7 ரூபாயால் அதிகரிக்கப்பட்ட நிலையில், அதன் புதிய விலை 185 ரூபாயாகும்.

மேலும் 92 ஒக்டேன் பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 12 ரூபாயால் அதிகரிக்கப்பட்ட நிலையில், அதன் புதிய விலை 305 ரூபாயாகும்.

## தனியார்...

பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளன.

இலங்கை போக்குவரத்துச் சபையின் வடக்கு மாகாண சாலைகளில் நடைபெறும் சட்டவிரோத அத்துமீறிய செயற்பாடுகளைக் கண்டித்து, இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளதாக அந்தச் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

நேர அட்டவணையில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக இலங்கை போக்குவரத்துச் சபையின் பணியாளர்களுக்கும், தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கும் இடையே அண்மையில் முறுகல் நிலை ஒன்று ஏற்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் சட்டவிரோதமாக அத்துமீறிய சேவைகள் இடம்பெறுவதாக இரு தரப்பினரும் பரஸ்பரம் குற்றம் சுமத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2025.06.30 — சீட்டிழுப்பு இலக்கம் 5876 — M 8 2 6 8 1 4
அத சம்பத — M 6 8 1 4 — சீட்டிழுப்பு இலக்கம் 0451 — National Lotteries Board

தன நிதானய — திகதி - 2025.06.30 — சீட்டிழுப்பு இலக்கம் - 1906 — U 10 23 29 36 U — Double Chance 15562

மெகா பவர் — திகதி 30/06/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2224 — X 24 32 43 70 76

ஜய — திகதி 2025.06.30 — சீட்டிழுப்பு இலக்கம் 0144 — T 4 2 7 1

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4118 — சீட்டிழுப்பு திகதி 30.06.2025 — Z 11 46 76 78 — Z

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.06.30 — சீட்டிழுப்பு இலக்கம் 1185 — தனுசு 02 14 30 60 தனுசு — 45575 — 29

உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபிர் தன சம்பத — 30.06.2025 — வெற்றி வாரம் 584 — Y 7 5 6 1 5 1 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,287,111.20 — 70037 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2850 — சீட்டிழுப்பு திகதி 2025.06.30 — தினம் திங்கட்கிழமை — 31 45 60 71 U — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 71,902,486.40 — DLB

சனிதா — திகதி 30.06.2025 — வெற்றி வாரம் 5011 — 06 11 21 28 A — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 69,918,060.80 — ரூ. 50,000/- 73917 — DLB

ஜயோதா Jayoda — திகதி 2025.06.30 — வெற்றி வாரம் 2139 — 25 39 44 64 P — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 30,155,537.60 — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4562 — சீட்டிழுப்பு திகதி 30.06.2025 — தினம் திங்கட்கிழமை — 13 33 36 46 கன்னி — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,773,710.80 — 200350 — DLB

கப்ருக — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — H 16 10 27 35 63 — 2026 — 30.06.2025 திங்கட்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.580,226,307.00 — DLB

அத கோடிபதி ADA KOTIPATHI — திங்கட்கிழமை — வெற்றி வாரம்: 2676 — சீட்டிழுப்பு திகதி: 2025.06.30 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.67,599,850.40 — 03 08 17 20 K — ரூ.100,000/- 816132 — DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3309)

076 825 7716 (ஆகாஸ்)



## மாப்பிள்ளை தேவை

1. கோண்டாவில் – மாவிட்டபுரம், இந்து, 1994, அவிட்டம், Bachelor of Management, மணப்பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
2. சாவகச்சேரி, இந்து, 1993, ரேவதி, LLB Degree, மணப்பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
3. நெல்லியடி – வல்வெட்டித்துறை, இந்து, 1991, அத்தம், B.Eng (hons), MBA, மணப்பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
4. காரைநகர், இந்து, 1996, சதயம், B.SC, M.Sc, Soft ware Engineer, மணப்பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
5. நெல்லியடி, இந்து, 1995, மகம், B.Sc, மணப்பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
6. வண்ணார்பண்ணை – அல்லைப்பிட்டி, இந்து, 1989, புனர்பூசம், Masters, மணப்பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
7. கந்தர்மடம், இந்து, 1988, சுவாதி, B.Sc, M.Sc, மணப்பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
8. துன்னாலை – பருத்தித்துறை, இந்து, 1987, பூரட்டாதி, Masters, மணப்பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
9. சித்தங்கேணி – அளவெட்டி, இந்து, 1987, மகம், B.Sc, மணப்பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
10. அராலி – சுழிபுரம், இந்து, 1994, ஆயிலியம், MBBS, மணப்பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.

எம்மிடம் எல்லா நாட்டிலும், எல்லா ஜாதியிலும் Unmarried, Divorce மாப்பிள்ளைகளும் மணப்பெண்களும் உண்டு. (C-3308)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728


# முன்னாள் அமைச்சர் காமினி காலமானார்



முன்னாள் அமைச்சர் காமினி லொக்குகே (82) நேற்றிரவு காலமானார்.

கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் காலமானார். (ம-7)

# தேவையான ...

யாழ்ப்பாணம், செம்மணி - சித்துப்பாத்தி மனிதப்புதைகுழி விடயம் தொடர்பில் நேற்று பாராளுமன்ற விசேட அமர்வின் போது கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

புதைகுழிகள் தொடர்பில் ஆய்வுகளை முன்னெடுப்பதற்குத் தேவையான ஒத்துழைப்புகளை வழங்குமாறு அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்கிடம் கோரிக்கை விடுத்ததாக கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தமது உரையில் தெரிவித்தார்.

தமது வலிகளைப் புரிந்து கொள்ளுமாறே தமிழர்கள் கோருவதாக யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா இதன்போது தெரிவித்தார்.

இதேவேளை, செம்மணி மனிதப் புதைகுழி விடயத்தில் நீதி நிலைநாட்டப்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் கோரிக்கை விடுத்தார். (ம-7)


## சிறுநீரகம் தேவை

0+ இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரக நோயாளி ஒருவருக்கு அவசரமாக சிறுநீரகம் தேவைப்படுகிறது.
45 வயதுக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. (1279)

074 076 8566



## கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3960/-
11-16 Kg 2790/-
21-30 Kg 2650/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery

UK 11Kg - 1400/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2500/- Australia 11Kg - 1980/- Italy 11Kg - 2260/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் Metro Branch, சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237 (C-3311)



## வீடு வாடகைக்கு தேவை

நல்லூர், கச்சேரி, அரியாலை மற்றும் யாழ் நகரை அண்மித்த பகுதிகளில் வீடு வாடகைக்கு தேவை (4682)

077 291 9079



## வேலையாட்கள் தேவை

நல்லூரில் அமைந்துள்ள பிரபல சைவ உணவகம் ஒன்றிற்கு சிற்றுண்டி தயாரிப்பதற்கு வேலையாட்கள் தேவை.
(பெண்கள் விரும்பத்தக்கது) (4676)

070 664 7466
077 469 6695




## உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, திருகோணமலை, கோப்பாய், பண்டத்தரிப்பு, கொழும்பு, சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர், சங்கானை

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com (C-3311)


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



மண்ணுலகம் 07 . 11 . 1944
விண்ணுலகம் 03 . 06 . 2025

கடந்த 03.06.2025 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

## அமரர் வினாசித்தம்பி அமுதவல்லி

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (01.07.2025) செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் (03.07.2025) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்திலும் நடைபெற்று அதனைத் தொடர்ந்து சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள திவ்விய ஜீவன மண்டபத்தில் பகல் 11.00 மணியளவில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன விருந்துபசாரத்திலும் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

வச்சாவளை வீதி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

தகவல்: கணவன்,
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள் (4679)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி கிரியையும்



அமரர்

## திருமதி மகேந்திரராஜா சிறீசாந்தினி

கடந்த 01.06.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (01.07.2025) செவ்வாய்க்கிழமை காலை 5.00 மணியளவில் கீரிமலை புண்ணிய தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நாளை (02.07.2025) புதன்கிழமை அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும்.

பெருந்தெரு,
புலோலி தெற்கு, புலோலி. (C-3307)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 91, [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.